
கொலம்பியா

புதிய வெளியீடு!



S.V. பார்த்தசாரதி

பாடிய

GE 6326

உனையல்லால்

(ராகம் ஸிம்மேந்திரமத்யமம்) (2 பாகங்கள்)




M.L. வஸந்தகுமாரி

பாடிய

GE.6312

மாயன் யமுனா நதீ

ஸ்வாமி மயூரகிரி



ஸ்ரீமதி

லக்ஷ்மிலோகசுப்ரமண்யம்

பாடிய

GE.6322

ஓம் நமசிவாயம் (நீதச)

கார்பதுவே

(சிந்துபைரவி)

G.H. RAO

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.2.

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடமும் கிடைக்கும்:

மெஸர்ஸ். குப்தா கார்ப்பொரேஷன்

தபால் பெட்டி நெ. 35, 17-A/428, அருணாசல ஆச்சாரி தெரு, சேலம்

கல்கி

பொருளடக்கம்

மலர் 6
இதழ் 21

1946 டிசம்பர் 22

வியய
மார்கழி 7

''கல்கி''யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

இப்போதெல்லாம் வடநாட்டுத் தலைவர்கள் தென்னாட்டுக்கு விஜயம் செய்யப் போவதாக அறிவிப்பதும் பின்னர் ஏதாவது அசந்தர்ப்பம் காரணமாக வராம லிருந்துவிடுவதும் சகஜமாகி வருகிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் அதிக ஏமாற்றத்துக்குள்ளாகா திருக்கும் பொருட்டு மேற்படி தலைவர்களின் படங்களை நாம் நமது அட்டையில் பிரசுரித்து வருகிறோம். ஏற்கெனவே பாபு ராஜேந்திரபிரஸாத் உணவு நிலைமை நேரில் அறியும் பொருட்டு தென்னாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்வதா யிருந்தார். கடைசி நேரத்தில் வர முடியவில்லை என்று அறிவித்து விட்டார். ஆனால் நமது அட்டைப் படத்தில் தோன்றித் தமிழ் நாட்டைச் சுற்றிப் பார்த்தார்!



இப்போது, காங்கிரஸ் அக்கிராசனர் ஆசார்ய கிருபளானி நாளது டிசம்பர் மீ 23ந் தேதியன்று சென்னையில் ஆரம்பமாகப் போகும் அகில இந்திய சுதேசிப் பொருட் காட்சிச் சாலையைத் திறந்து வைக்கப் போவதாகச் செய்தி வந்து அதுவும் இல்லை என்று ஊர்ஜிதமாகிவிட்டது.

இதோ, நமது அட்டைப் படத்தில் அவரும் அவருடைய வாழ்க்கைத் துணைவி ஸ்ரீமதி ஸுசேதா கிருபளானியும் அளவிலாத மகிழ்ச்சியுடன் காட்சி அளிக்கின்றார்கள்.

ஸ்ரீமதி ஸுசேதா கிருபளானி ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை நடத்துபவர். தேசப்பணி புரியும் உத்தம சேவிகைகளில் முதன்மை ஸ்தானம் வகிப்பவர். மகாத்மாவின் அன்புக்குப் பாத்திரமானவர். எம். ஏ. பட்டதாரி. அரசியல் விஷய ஞானமும், அதே சமயத்தில் குடும்பக் காரியங்கள் செய்வதில் விசேஷத் திறமையு முடையவர். 1934-ம் வருஷத்தில் பீகாரில் பூகம்பம் ஏற்பட்ட போது ஆசார்ய கிருபளானியுடன் சேர்ந்து உழைத்ததன் பலனாக வாழ்க்கை பூராவும் கிருபளானியுடன் சேர்ந்து இருக்கும் பாக்கியம் பெற்றார்.

சமீபத்தில் கீழ் வங்காளத்தில் நடந்த அட்டூழியங்கள் காரணமாக அல்லலுற்ற ஏழைக் குடும்பங்களின் கஷ்ட நிவாரண வேலைகளில் ஈடுபட்டுக் கிராமம் கிராமமாகச் சென்று பல நாட்கள் அங்கே தங்கித் தொண்டு புரிந்திருக்கிறார். இடையில் புதுடில்லியில் அரசியல் நிர்ணய சபை கூடியபோது அதில் கலந்து கொள்ளுவதற்காக வந்திருந்தார். மறுபடியும் இப்போது மகாத்மாஜி தங்கியுள்ள கீழ் வங்காளத்துக்கே புறப்பட்டுச் சென்று சமூகத் தொண்டு செய்து வருகிறார்.

இத்தகைய உத்தம குணம் படைத்த ஸுசேதா கிருபளானியையும் சதிக்கேற்ற பதியாக விளங்கும் ஆசார்ய கிருபளானியையும் இந்த இதழ் அட்டைப் படத்தில் காண்கிறோம்.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 21

என்ன சேதி?

"மாலி" மறைந்தார்

தமிழ் நாட்டார் "மாலி" என்ற பெயரால் நன்கறிந்த ஸ்ரீ டி. ஆர். மகாலிங்கம் காலஞ்சென்றது அறிந்து பெரிதும் துயரம் அடைகிறோம். ஹாஸ்ய சித்திரக் கலையில் இணையற்ற திறமை பெற்றிருந்த "மாலி" அந்தக் கலைத் துறையில் இந்தியாவிலேயே முதன் முதலில் பிராபல்யம் அடைந்தவர். அவர் காட்டிய வழியைப் பின் பற்றித் தென்னாட்டில் இன்று பலர் ஹாஸ்ய சித்திரக் கலையில் தேர்ச்சி பெற்று விளங்குகிறார்கள். அவருடைய மறைவு தமிழ் நாட்டுக்கும் இந்தியாவுக்குமே மிகப் பெரிய நஷ்டமாகும். "மாலி"யின் குடும்பத்தாருக்கு நமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ராமு பிரிந்தார்

ராஜாஜியின் அருமைப் புதல்வரும், தமிழ் நாட்டின் சிறந்த சிறு கதை எழுத்தாளரில் ஒருவருமான டாக்டர் சி. ஆர். ராமஸ்வாமி சென்ற வாரத்தில் நம்மைப் பிரிந்து சென்றார். இந்த வருஷத்துக் "கல்கி" தீபாவளி மலரிலும், சென்ற வாரக் "கல்கி" இதழிலும் டாக்டர் ராமுவின் அருமையான சிறு கதைகளை நேயர்கள் படித்திருப்பார்கள். இத்தகைய பெருந் துயரம் ராஜாஜிக்கு நேர்ந்திருப்பதை நினைக்கும்போது ஆண்டவனுடைய கருணைத் திறத்திலேயே நமக்குச் சந்தேகம் உண்டாகிறது. ஸ்ரீ ராமுவின் இளம் மனைவியையும் சின்னஞ் சிறு குழந்தைகளையும் நினைக்கும் போது மேலே எதுவும் எழுதுவது சாத்தியமில்லாமல் போகிறது. யமன் மிகக் கொடியவன் என்பதில் சந்தேகம் இல்லை.



டி. ஆர். மகாலிங்கம்—"மாலி"

எழுத்தாளர் மகாநாடு


தமிழ் எழுத்தாளரின் இரண்டாவது மகாநாடு "துரான்" என்னும் புனை பெயர் கொண்ட ஸ்ரீ எம். பி. பெரியசாமி அவர்களின் தலைமையில் சிறப்பாக நடந்தேறிய விவரங்களை நேயர்கள் தினப் பத்திரிகையில் படித்திருப்பார்கள். மகாநாட்டைத் திறந்து வைத்த நாமக்கல் கவிஞரும், பத்திரிகைக் கண் காட்சி விழாவில் கலந்து கொண்ட ஸ்ரீ பி. சம்பந்த முதலியார், ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் முதலியவர்களும் தமிழ் முன்னேற்றத்துக்கான சிறந்த யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். கல்வி மந்திரி ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்கள் தமிழ் அபிவிருத்திக்குத் தம்மாலியன்ற உதவிகள் எல்லாம் செய்வதாகக் கூறியது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

பலிக்கவில்லை!

தற்போது டில்லியில் கூடியிருக்கும் இந்திய அரசியல் நிர்ணய சபையைக் கூடாமல் பண்ணுவதற்காக மாஜி பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் செய்த முயற்சி பலிக்காததற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

வின்ஸ்டன் சர்ச்சில் மாத்திரம் அல்ல; கன்ஸர்வேடிவ் கட்சி முழுவதுமே தங்கள் சக்தியையெல்லாம் உபயோகித்து, இந்திய சுதந்திரத்துக்கு முட்டுக் கட்டை போடும் இந்தத் திருப்பணியில் முனைந்தார்கள். ஆனால், ஒன்றும் பலிக்கவில்லை.

அரசியல் நிர்ணய சபையைப் பற்றி



சென்ற வாரம் சென்னையில் எழுத்தாளர்கள் மகாநாடு கூடியபோது நாமக்கல் கவிஞர் தமது திறப்புவிழாப் பிரசங்கத்தைப் படிக்கும் காட்சி. தலைவர் ஸ்ரீ ம. பெ. பெரியசாமி (பெ. தூரன்) ஸ்ரீ ரா. நாராயண ஐயங்கார், ஸ்ரீ வ. ரா. முதலியவர்களைப் படத்தில் காணலாம்.

அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பிரிட்டிஷ் மந்திரிகள் சாமர்த்தியமாகப் பதில் சொல்லி வின்ஸ்டன் சர்ச்சிலின் முகத்திலே கரியைப் பூசி விருக்கிறார்கள்.

"முஸ்லிம் லீக் இல்லாமல் கூடும் அரசியல் நிர்ணய சபை செல்லுமா?" என்று சர்ச்சில் கேட்டார். அதற்கு பிரிட்டிஷ் மந்திரிகளுள் ஒருவராகிய ஏ. வி. அலெக்ஸாந்தர் பதிலளிக்கையில், "செல்லும், செல்லும், நன்றாகச் செல்லும். முஸ்லிம் லீக் கலந்து கொள்ளவில்லையென்றால் அதற்கு நாம் என்ன செய்வது?" என்று வெகு தெளிவாகவும் சந்தேகத்துக்கு இடமில்லாமலும் பதில் கூறி யிருக்கிறார்.

லின்லித்கோ கைங்கரியம்

வின்ஸ்டன் சர்ச்சிலின் புண்ணியத்தால் பார்லிமெண்டில் நடந்த இந்திய விவாதத்தின்போது, மாஜி இந்திய வைஸ்ராய் லார்டு லின்லித்கோ பிரபு இந்தியப் பிரச்னை சம்பந்தமாகத் தம்முடைய மேன்மையான அபிப்பிராயத்தைப் பார்லிமெண்டில் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவிலே வகுப்பு ஒற்றுமை ஏற்படும் வரை பிரிட்டன் அதிகாரத்தைத் தூக்கி வேறு யாரிடமும் கொடுத்துவிடக் கூடாதென்றும், மேற்படி வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக பிரிட்டன் இன்னும் வெகு காலம் இந்தியாவிலே தங்கியிருக்க வேண்டியதாக வந்தாலும் வரும் என்று தாம் அஞ்சுவதாகவும் சொல்லியிருக்கிறார்.

யோசனை சொல்வாரா?

பாவம், லார்ட் லின்லித்கோ எதற்காக அப்படி அஞ்சவேண்டும்? அப்படி அஞ்சி அஞ்சி எதற்காகத் தம்முடைய தூக்கத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டும்? ருஷ்யாவிலிருந்து வெளியாகும் "நியூ டைம்ஸ்" என்னும் பத்திரிகை இதற்கு ஒரு பேஷான யோசனையைச் சொல்லுகிறது. "பிரிட்டன் இந்தியாவிலே இருக்கும் வரை அங்கே கலகங்களும் தொடர்ந்து நடக்கும். இந்தியப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமானால், அதற்குப் பரிபூரண சுதந்திரத்தைக் கொடுப்பதுதான் வழியாகும்" என்று அது சொல்லுகிறது. அதாவது, இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் பிரிட்டன் இந்தியாவிலிருந்து கடையைக் கட்ட வேண்டும் என்று சொல்லுகிறது.


லார்ட் லின்லித்கோ இந்த யோசனையைக் கடைப் பிடிக்கத் தொடங்கினால்

அவருக்கு நிம்மதியான தூக்கம் உண்டாகும் அல்லவா ?

புதிய ஞானோதயம்

தற்போது அரசியல் நிர்ணய சபையில் விவாதத்திற்கு வந்திருக்கும் பண்டித நேருவின் குடியரசுத் தீர்மானத்தைப் பற்றிப் பேசுகையில், டாக்டர் அம்பேத்கர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க ஒரு அற்புதமான விஷயத்தைச் சொல்லியிருக்கிறார். அதாவது, அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் சமூகத் துறையிலும் இந்தியா எவ்வளவுதான் பிரிந்திருந்த போதிலும், காலமும் இருந்து சந்தர்ப்பங்களும் கிடைத்தால் இந்த தேசம் ஒரு ஐக்கிய தேசமாவதை யாராலும் தடுக்க முடியாதென்றும் நமக்குள் எத்தனை ஜாதிகளும் மதங்களும் இருந்த போதிலும், நாம் எதாவது ஒருவகையில் ஒரு ஐக்கிய சமுதாயமாக விளங்குவோம் என்றும் சொல்லியிருக்கிறார். அத்துடன் அவர் நிற்கவில்லை. இன்னும் ஒரு படி மேலே போகிறார். என்றாவது ஒரு நாள் முஸ்லிம்கள் போதிய நல்லுணர்வு பெறுவார்கள் என்றும் ஐக்கிய இந்தியாதான் எல்லோருக்கும் நல்லதென்று அவர்கள் கருதுவார்களென்று தான் உறுதியாக நம்புவதாகவும் டாக்டர் அம்பேத்கர் சொல்லுகிறார்.

முஸ்லிம்களுக்கு நல்லுணர்வு தோன்றுவதையும் தோன்றாததையும் பற்றி எதுவும் சொல்ல நாம் விரும்பவில்லை. டாக்டர் அம்பேத்கருக்கு அத்தகைய நல்லுணர்வு ஏற்பட்டதுதான் மகிழ்ச்சிக்குரிய விஷயம். அந்த நல்லுணர்வு எப்போதும் நீடித்திருக்க வேண்டும், ஐக்கிய இந்தியாவுக்காக அவர் பாடுபடவேண்டும் என்பதே நம்முடைய மனமார்ந்த பிரார்த்தனையாகும்.




பையன்:—"ஸார்! கூலி வேணுமா, கூலி?"

[விறகு ரேஷன் இன்னும் குறையுமென்று சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.]

தமிழிசைக் கச்சேரிகள்

வழக்கம்போல் இந்த வருஷமும் தமிழிசைக் கச்சேரிகள் உண்டு. நாளது 23உ யன்று ஸெண்ட் மேரீஸ் ஹாலில் மாராமத்து இலாகா மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் இந்த வருஷ சங்கீத விழாவை ஆரம்பித்து வைக்கப் போகிறார். பிரபல கர்நாடக சங்கீத வித்வான்கள் பலர் கச்சேரி செய்யப் போகிறார்கள் என்பதை சங்கீத ரஸிகர்கள் இதற்குள் பத்திரிகைகளில் பார்த்திருப்பார்கள். எனவே, இவ்வருஷத் தமிழிசைக் கச்சேரிகள் வெகு விமரிசையாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறும் என்பதில் சந்தேகமில்லை.







அறுபது வருஷ சுதந்திரப் போராட்டத்துக்குப் பின் னர் புது டில்லியில் அரசி யல் நிர்ணய சபை கூடியிருக் கிறது. அதோ பண்டிட் ஜவாஹர்லால் நேருவும், காங்கிரஸ் அக்ராசனர் ஆசார்ய கிருபளானியும் கவனமுடன் காரியத்தைக் கவனிக்கின்றனர்.

அரசியல் நிர்ணயசபை மண் டபத்தின் ஒரு தோற்றம்.

ஜவாஹருடன் இருப்பவர் அ. நி. சபையின் நிரந்தர அக் கிராசனர் பாபு ராஜேந்திர பிரஸாத். (இடம்) ஸ்ரீ ஜீவிதேவியும் ஸ்ரீ எஸ். ராதாகிருஷ்ணனும் — இரு சக்தியப் பிரதிநிதிகள்.









கல்வி மந்திரி ராஜாஜியும், உள்நாட்டு மந்திரி சர்தார் படேலும்

*

சில மந்திரி அங்கத்தினர்கள்.

*

கான் அப்துல் கபார்கானும் எல்லைப்புற நிதி மந்திரி மேகர் சந்த் கன்னாவும்.

*

பம்பாய்ப் பிரதமர் பி. ஜி. கேர்—ஸ்ரீ சரத்சந்திர போஸ்
















லண்டனிலிருந்து பறந்து வந்த பண்டித ஜவாஹரும் தற்காப்பு மந்திரி பலதேவ் சிங்கும்.

★

உணவு மந்திரி பாபு ராஜேந்திர பிரஸாத்.

★

தலைவர் ராஜாஜியும் ஒரு பத்திரிகை நிருபரும்.

★

மத்திய மாகாணப் பிரதமர் ரவிசங்கர் சுக்லாவும் ஸ்ரீ கே. எம். முன்ஷியும்.

பணம் காய்க்கும் மரம்!

ஒரு காலத்தில், அதாவது சுமார் நூற்றைம்பது வருஷத்துக்கு முன்னால் ஐரோப்பா கண்டத்திலெல்லாம் ஓர் அதிசயமான வதந்தி பரவியிருந்தது.

"இந்தியா என்று ஒரு தேசம் இருக்கிறதாம். அந்த தேசத்தில் ஓர் அதிசயமான மரம் உண்டாம். அந்த மரத்தில் குலை குலையாகவும் கொத்துக் கொத்தாகவும் பணம் காய்த்துத் தொங்குமாம். மரத்தைப் பிடித்து உலுக்கினால் கலகலவென்று பணம் கொட்டுமாம். கொட்டிய பணத்தைத் திரட்டி எடுத்துக் கொண்டு வர வேண்டியதுதானாம். கட்டுக் காவல் ஒன்றுமே கிடையாதாம்!" — இப்படியாக ஐரோப்பிய தேசங்களில் ஜனங்கள் அதிசயத்துடன் கதை சொல்லுவதும், அதைப் பலர் ஆவலுடன் கேட்பதும் வழக்கமாயிருந்தது.

இதற்கெல்லாம் காரணம் அந்த நாளில் இந்தியா தேசத்துக்கு வந்த இங்கிலீஷ்காரர்கள் இங்கேயிருந்து மூட்டை மூட்டையாகவும் கப்பல் கப்பலாகவும் பணத்தைக் கொண்டு போய் இங்கிலாந்தில் குவித்துக் கொண்டிருந்ததுதான்!

"இந்தியாவிலே நிச்சயமாகப் பணம் காய்க்கும் மரம் இருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் அந்த தேசத்துக்குப் போய் விட்டுத் திரும்பும் இங்கிலீஷ்காரர்கள் இவ்வளவு பணம் எப்படிக் கொண்டு வர முடியும்?" என்று கேட்பவர்களுக்கு யாராலும் பதில் சொல்ல முடியவில்லை.

இப்படி இந்தியா தேசத்தில் பணம் காய்க்கும் மரத்தை உலுக்கிப் பணந் திரட்டிக் கொண்டு போன ஆங்கிலேயர்கள் முதன் முதலில் இந்தியாவுக்கு வந்தபோது, தோளிலே துணி மூட்டையைச் சுமந்து கொண்டு, "துணியோ துணி!" "துணி வாங்கலையோ துணி!" என்று கூவிக் கொண்டு வந்தவர்கள்தான். வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்க வந்தவர்கள் பல்வேறு காரணங்களினால் சிறிது சிறிதாகத் தேசத்தையே கைப்பற்றிக் கொண்டு இராஜ்யம் நடத்தத் தொடங்கினார்கள். பேரம் செய்து பழக்கப்பட்டவர்கள் இராஜ்ய பாரம் வகிக்கும்படி நேர்ந்தால், அரசாங்கம் எப்படி நடக்கும் என்று கேட்க வேண்டுமா? 'எரிகிற வீட்டிலே பிடுங்கின வரையில் லாபம்' என்ற பழமொழியை அனுசரித்துக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கம் வெகு காலம் வரையில் நடந்து வந்தது. 1857-ம் ஆண்டில் எரிமலை வெடித்ததுபோல் இந்தியாவில் பெரும் புரட்சி நடந்து அடங்கிய பிறகுதான் இந்தியாவின் அரசாங்கம் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து விக்டோரியா மகாராணியின் நேரான நிர்வாகத்துக்கு மாறியது.

இராஜ்ய நிர்வாகத்தில் மேற்கண்ட மாறுதல் நிகழ்ந்த போதிலும் நிர்வாகத்தின் நோக்கம் என்னமோ சிறிதளவும் மாறவில்லை. இந்திய பிரிட்டிஷ் அரசாங்கம் ஆங்கில வியாபாரிகளின் நன்மையை முதன்மையான நோக்கமாக வைத்துக் கொண்டே நடைபெற்று வந்தது. எந்த விதமான அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்பட்டாலும், பிரிட்டிஷ் வியாபாரத்துக்கு எவ்விதக் குந்தகமும் ஏற்படாதபடி முன் ஜாக்கிரதை செய்துகொண்டார்கள்.

இதுமட்டுமல்லாமல் வருஷந்தோறும் ஒரு தடவை இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் நடைபெறுவதின் முக்கிய நோக்கம் என்னவென்பதை இந்திய அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த சகலருக்கும் ஞாபகப்படுத்தி வந்தார்கள். இவ்விதம் ஞாபகப் படுத்துவதற்காகவென்றே ஒரு வருஷாந்தரச் சடங்கு நடைபெற்று வந்தது. இந்தியாவிலுள்ள ஐரோப்பிய வியாபாரச் சங்கங்களின் வருஷாந்தரக் கூட்டத்தை ஒவ்வொரு வருஷம் டிசம்பர் மாதத்திலும் கூட்டுவார்கள். முதன் முதலில் பிரிட்டிஷ் வியாபாரிகளின் ஆட்சி நிலையாக ஸ்தாபிதமான கல்கத்தா மாநகரத்திலேதான் மேற்படி வருஷாந்தரக் கூட்டம் பெரும்பாலும் நடைபெறும். இந்த வருஷாந்தரச் சடங்குக்கு இந்தியாவின் இராஜப் பிரதிநிதி தவறாமல் விஜயம் செய்வார். விஜயம் செய்து சொற்பொழிவு ஆற்றுவார். அந்தந்த வருஷத்துக்கு முக்கியமான அரசியல் பிரச்னைகளைக் குறித்து அலசி ஆராய்வார். பெரிய பெரிய அரசியல் பிரச்னைகளில் சர்க்

கார் எந்தவிதக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கப் போகிறார்கள், என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை யெல்லாம் ஐரோப்பிய வியாபாரச் சங்கங்களின் வருஷாந்தரக் கூட்டத்திலே வைஸ்ராய்கள் வெளியிடுவது தொன்றுதொட்ட சம்பிரதாயமாயிருந்து வந்திருக்கிறது.

அப்படிப்பட்ட பழமையான சம்பிரதாயத்தில் நானது 1946-ம் வருஷத்திலே ஒரு சிறு மாறுதலைக் கண்டோம். சிறு மாறுதல் ஆனபோதிலும் அதிசயமான மாறுதல்தான். அதாவது ஐரோப்பிய வியாபாரச் சங்கங்களின் இந்த ஆண்டு வருஷாந்தரக் கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்ற வைஸ்ராயை அழைப்பதற்குப் பதிலாகப் பண்டித ஜவாஹர்லால்ஜியை அழைத்தார்கள்! ஜவாஹர்ஜியும் சென்று சொற்பொழிவு ஆற்றினார்!

என்ன இருந்தாலும் இங்கிலீஷ்காரன், இங்கிலீஷ்காரன்தான்! அதிலும் இங்கிலீஷ்கார வியாபாரிகள் இருக்கிறார்களே, மகாமகா கெட்டிக்காரர்கள்! ஒரு மாதிரி இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு மங்களம் பாடியாகிவிட்டது என்பதை பிரிட்டிஷ் வியாபாரிகள் தெரிந்து கொண்டார்கள். பிரிட்டிஷ் ஆட்சி முற்றுப் பெற்றாலும் பிரிட்டிஷ் வியாபாரத்துக்குக் குந்தகம் நேரக் கூடாதல்லவா? அப்படி நேராமல் ஜாக்கிரதை செய்து கொள்ள என்ன வழி என்று யோசித்தார்கள். வைஸ்ராய் வேவலை அழைப்பதற்குப் பதிலாகப் பண்டித ஜவாஹர்லாலை அழைத்தார்கள்!

“இந்தியாவிலே சுதந்திர ஆட்சி ஏற்படவில்லை. இன்னும் பிரிட்டிஷ் ஆட்சிதான் நடக்கிறது” என்று ஜனாப் ஜின்னா என்னதான் கதறினாலும் என்ன பிரயோஜனம்? அல்லது பண்டித ஜவாஹர்லால் நேருவே அப்படிச் சொன்னால்தான் சொல்லட்டுமே? பிரிட்டிஷ் வர்த்தகர்கள் எப்போது வைஸ்ராயின் ஸ்தானத்தில் ஜவாஹரை அழைத்தார்களோ, அப்போது இந்த நாட்டில் இப்போது நடப்பது சுதந்திர அரசாங்கந்தான் என்பதும், அந்தச் சுதந்திர அரசாங்கத்தின் தலைவர் பண்டித ஜவாஹர்லால் என்பதும் சர்வ நிச்சயமான விஷயங்களாகும். இதை ஜவாஹர்லால்ஜியே மறுதளித்தாலும் அதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது!

ஐரோப்பிய வர்த்தகச் சங்கத்தார் பண்டித ஜவாஹர்லாலைத் தங்கள் வருஷாந்தரக் கூட்டத்துக்கு அழைத்ததோடு மட்டும் நிற்கவில்லை. அச் சங்கத்தின் தலைவர் மிஸ்டர் டவுனெண்ட் தமது வரவேற்புப் பேச்சில் தேனைக் கலந்து சொரிந்திருக்கிறார். “பண்டிட்ஜி! இங்கிலாந்தில் தாங்கள் ‘இனிமேல் இந்தியாவில் முக்கிய பிரச்னை அரசியல் பிரச்னை அல்ல; பொருளாதாரப் பிரச்னைதான்!’ என்று சொன்னீர்களே? அது ரொம்ப சரியான விஷயம். அதை நாங்கள் பூரணமாய் ஒத்துக் கொள்கிறோம். பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் விஷயத்தில் நாங்கள் பூரண உதவி அளிக்கத் தயாராயிருக்கிறோம்!” என்று மிஸ்டர் டவுனெண்ட் துரை சக்கைப்போடு போட்டிருக்கிறார்!

“போதும் ஐயா, போதும்! சென்ற நூற்றைம்பது வருஷமாக இந்தியாவின் பொருளாதார கனத்தைக் குறைப்பதற்கு நீங்கள் செய்த உதவி போதும்! கடையைக் கட்டிக்கொண்டு போய் வாருங்கள்!” என்று பண்டித ஜவாஹர்லால்ஜி பதில் சொல்லியிருக்கலாம். ஆனால் மரியாதைக்கார மனிதராகையால் அப்படி முகத்தில் அடித்தாற்போல் பதில் சொல்லவில்லை. மிகவும் நாஸூக்காகவும் ஆனால் உண்மையை விட்டுக் கொடுக்காமலும் பதில் சொல்லியிருக்கிறார்.

“ரொம்ப சந்தோஷம்! உங்களுடைய உதவி தேவைதான். உலகத்தில் இன்னும் எல்லாத் தேசங்களின் உதவியும் தேவைதான். இந்தியாவும் அப்படி ரொம்ப நிர்க்கதியான நிலைமையில் இல்லை; மிகவும் சௌகரியமான நிலைமையில்தான் இருக்கிறது. எந்தப் பெரிய தேசமும் இந்தியாவினுடைய சிநேகத்தைக் கோரிப் பெற்று லாபம் அடைய இடம் உண்டு. அப்பேர்ப்பட்ட அமெரிக்கா தேசங்கூட இந்தியாவினுடைய சிநேகத்தினால் நன்மையடையக் கூடும். ஆகவே பிரிட்டிஷாராகிய நீங்களும் இந்தியாவுடன் சிநேகத்துடன் நடந்து கொண்டால் உங்களுக்கு நன்மை ரொம்ப உண்டு. மேலும் நாம் சென்ற 150 வருஷமாகத் தொடர்பு கொண்டவர்கள் அல்லவா? அந்தத் தொடர்பு இலேசில் விட்டுப் போகுமா? நீங்களாக துர்ப்புத்தியினால் சிநேகத்தைக் கெடுத்துக் கொண்டால்தான் உண்டு!” என்று அழகாகவும் அப்

பட்டமாகவும் இந்தியாவின் மாபெருந் தலைவர் பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு உண்மையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

* * *

வர்த்தகர்களின் முன்னால் பேசும்போது, வர்த்தகத் துறையை யொட்டிய இன்னும் சில பொருளாதாரப் பிரச்னைகளைப் பற்றியும் பண்டித ஜவாஹர்லால்ஜி தமது கருத்துக்களை வெளியிட்டிருப்பது இயல்பேயாகும்.

நம் எல்லாருடைய மனதிலும் நெடுநாளாக உறுத்திக் கொண்டிருக்கும் ஒரு சந்தேகம் ஜவாஹர்லால்ஜியின் உள்ளத்திலும் குடிகொண்டிருப்பதாக அவருடைய வர்த்தகச் சங்கப் பேச்சிலிருந்து அறிகிறோம்.

அதாவது, யுத்த காலத்தில் அதிகமாக யாரும் பணம் சேர்த்துவிட முடியாதபடி வருமான வரி, அதிக வருமான வரி, அமித லாப வரி முதலிய வரிகளைச் சர்க்கார் விதித்திருந்தார்கள் அல்லவா?

நல்லது: அதுபோலவே வியாபாரிகள் சாமான்களைப் பதுக்கி வைத்துக் கொண்டிருந்து அநியாயமான லாபம் வைத்து விற்றுக் கொள்ளையடிக்க முடியாதபடி பலவித கட்டுப்பாடுகளையும் சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தியிருந்தார்கள் அல்லவா?

அப்படியெல்லாமிருந்தும், சென்ற நாலைந்து வருஷத்தில் ஒரு சிலர் ரொம்ப ரொம்ப ரொம்பப் பணம் சேர்த்துப் பெரிய பெரிய பெரிய பணக்காரர்களாகியிருப்பது எப்படி?

வருமானம் ஓரளவுக்கு மேலே போய்விட்டால், ரூபாய்க்குப் பதினைந்து அணு வீதமும் இன்னும் அதிகமாய்ப் போனால் ரூபாய்க்குப் பதினெட்டு அணு வீதமும் வரி கொடுக்க வேண்டியிருக்கிறது என்று புகார் சொல்லப்பட்டதல்லவா?

இந்தப் புகார் உண்மையானல், ஒரு சிலர் எப்படி ஐம்பது லட்சம், ஐந்து கோடி, ஐம்பது கோடி என்று பணம் பண்ணினார்கள்?

அப்படிப் பணம் பண்ணியதோடல்லாமல் அந்தப் பணத்தைக் கொண்டு, "இவ்வளவு பழைய கம்பெனிகளை வாங்கியிருக்கிறோம்; அவ்வளவு புதிய கம்பெனிகளை ஸ்தாபித்திருக்கிறோம்" என்றெல்லாம் விளம்பரமும் செய்கிறார்களே? இதெல்லாம் எவ்வாறு சாத்தியமாயிற்று? எப்படிச் சாத்தியமாகிறது?

பண்டித ஜவாஹர்லால்ஜி மேற்படி கேள்விகளைப் போட்டு விட்டு, "இதெல்லாம் எனக்கு மர்மமாகவே இருக்கிறது; விஷயம் விளங்கவில்லை!" என்று சொல்லியிருக்கிறார்.

அவரைப் போலவே நாமும் எத்தனையோ தடவை ஆச்சரியப்பட்டிருக்கிறோம். "இவ்வளவு கட்டுப்பாடுகளும் வரிகளும் இருந்தும் ஒரு சிலர் எப்படி அவ்வளவு பணக்காரர்கள் ஆனார்கள்? அவர்களுடைய வீட்டுக் கொல்லைகளில் பணம் காய்க்கும் மரம் இருக்கிறதா?" என்று நூற்றைம்பது வருஷத்துக்கு முன்னால் ஐரோப்பியர்கள் வியந்ததுபோல், நாமும் வியந்திருக்கிறோம்.

ஆனாலும் கொஞ்சம் யோசனை செய்து பார்த்தால், அப்படியொன்றும் பிரமாதமான மர்மம் இல்லை யென்பதைக் காண்போம். காரணம் ஊகிக்கக் கூடிய விஷயந்தான் என்பதை அறிவோம்.

சர்க்காரின் கட்டுப்பாடுகள், சட்ட திட்டங்கள், வரி விகிதங்கள் எல்லாம் ஏழை எளியவர்களையும், நடுத்தரமானவர்களையுந்தான் அதிகமாகப் பாதித்தன. அவர்களைத்தான் முன்னுக்கு வர வொட்டாமல் அமுக்கி வைத்தன.

பெரிய பணக்காரர்களையும், முதலாளிகளையும் அவை அதிகமாகப் பாதிக்கவில்லை. பணக்காரர்கள் மேலும் பணம் சேர்ப்பதற்கும் சட்ட திட்டங்களுக்கு உட்படாமல் தப்பித்துக் கொள்வதற்கும் அவற்றில் எத்தனையோ இடுக்குகள் இருந்தன.

அந்த இடுக்குகள் வழியாக அவர்கள் தப்பித்துக் கொள்வதைச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பார்த்தால் கண்ணைச் சிமிட்டி விட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டார்கள்!

இந்தக் கண்ணைச் சிமிட்டும் காரியம் பெரிய பெரிய மிகப் பெரிய உத்தியோகஸ்தர்களாலும் கையாளப்பட்டது. யுத்தம் நடந்தபோது அதற்கு அவசியம் இருந்தது. யுத்த நிதிகளுக்கும் யுத்தக் கடன்களுக்கும் பணம் திரட்டும் வேலை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தலையில் விழுந்தது. இந்த வேலையைச் சரிவரச் செய்வதற்காக அவர்கள் பணக்காரர்கள் சட்ட திட்டங்களை மீறும்போது கண்ணைச் சிமிட்ட வேண்டியிருந்தது.

யுத்த நிதி சேர்ப்பதற்காகக் கண்ணைச் சிமிட்டிப் பழக்கமான உத்தியோகஸ்தர்களில் சிலர் பிற்பாடு தங்களுடைய சொந்த சகாயத்துக்காகவும் கண்ணைச் சிமிட்டத் தொடங்கினார்கள்!

ஆகக்கூடி, பொது ஜனங்களுடைய நன்மைக்காக வென்று ஏற்பட்ட

கண்ட்ரோல் முறை, லைசென்ஸ் முறை ஆகியவை யெல்லாம் சில பணக்கார முதலாளிகளும் வியாபாரிகளும் கறுப்பு மார்க்கெட்டில் கொள்ளை லாபம் சம்பாதிப்பதற்கும் சில சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கிப் பெரும் பணக்காரர்கள் ஆவதற்கும் ஏதுவாயின.

கறுப்பு மார்க்கெட், உத்தியோகஸ்தர் லஞ்சம் ஆகிய இரண்டு தீமைகளில் இரண்டாவதுதான் மிகக் கொடியதாகும்.

பயிரை ஆடு மாடுகள் மேயாமலிருப்பதற்காக வயலுக்கு வேலி போடுகிறோம். வேலியே பயிரை மேய ஆரம்பித்தால், அப்புறம் போகும் வழி என்ன?

* * *

பண்டித ஜவாஹர்லால்ஜி மேற்படி தீமையைப் பற்றிப் பிரஸ்தாபித்து அதற்கு ஒரு பரிகாரமும் சொல்லியிருக்கிறார்.

"தொழிலிலும் வியாபாரத்திலும் லாபம் சம்பாதிக்கும் நோக்கம் போய்விட வேண்டும்; பகிர்ந்து கொடுக்கும் நோக்கம் ஏற்பட வேண்டும்."

மிக அருமையான இலட்சியம், அற்புதமான இலட்சியம் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் மேற்படி இலட்சியம் நிறைவேறுவதற்கு ஜவாஹர்லால்ஜி கூறுவதுபோல், மனித சுபாவமே மாறியாக வேண்டும்.

மனித சுபாவம் என்று சொல்லும் போது இங்கே வியாபார சமூகத்தின் சுபாவத்தையே முக்கியமாகக் குறிப்பிடுகிறோம்.

தோன்று தொட்டு உலகத்திலேயே வியாபார சமூகத்தின் தலைசிறந்த நோக்கமாக இருந்து வந்திருப்பது என்ன?

கூடியவரை குறைந்த விலைக்கு வாங்குவது, கூடியவரை அதிக விலைக்கு விற்பது என்பதுதான்.

இப்படியாக, எவ்வளவு முடியுமோ அவ்வளவு லாபம் சம்பாதிக்க வேண்டும் என்னும் வியாபார நோக்கத்தை,—ஆதிகாலந் தொட்டு உலகில் நிலைபெற்றிருக்கும் வர்த்தக தர்மத்தை, — மாற்றுவது என்பது இலேசான காரியமல்ல.

சர்க்கார் சட்ட திட்டங்களினாலும், கண்ட்ரோல் - லைசென்ஸ் முறைகளினாலும், ஓரளவு மேற்படி லாப நோக்கத்தைக் கட்டுப்படுத்தி வைக்கலாம். ஆனால் எவ்வளவுதான் சட்ட திட்டங்கள் இருந்தாலும், அவற்றில் இடுக்கு எங்கே யிருக்கிறதென்று முதலாளிகள் தேடிக் கொண்டுதான் இருப்பார்கள்.

கண்ட்ரோல் - லைசென்ஸ் முறைகளினால் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவது என்னும் மற்றொரு மிகப் பெரிய தீமை ஏற்படுவதையும் நாம் கண் முன்னால் பார்க்கிறோம்.

* * *

ஜவாஹர்லால்ஜி விரும்புகிறபடி மனித சுபாவம் மாறுகிற வரையில், வியாபாரத்தில் லாப நோக்கம் அடியோடு போகிற வரையில், மேற்படி இரண்டு தீமைகளையும் ஒழிப்பதற்கு வேறு வழி ஒன்றும் இல்லையா?

நிச்சயமாக இருக்கிறது.

கறுப்பு மார்க்கெட், உத்தியோகஸ்தர் லஞ்சம், பணக்காரர் தப்பித்துக் கொள்ளுதல், ஏழைகள் அவஸ்தைப் படுதல் ஆகிய எல்லாத் தீமைகளுக்கும் அடிப்படையாக இருப்பது, ஜனங்களுக்கு வேண்டியிருப்பதைக் காட்டிலும் சாமான்கள் குறைவாகக் கிடைப்பதே யாகும். இந்த நிலைமை 'பற்றாக் குறை' என்று சொல்லப் படுகிறது.

'பற்றாக் குறை' நிலைமை மாறி ஜனங்களுக்கு வேண்டிய சாமான்கள் வேண்டிய அளவு கிடைக்கும் பட்சத்தில் மேற்கண்ட தீமைகள் பெரும் பாலும் அகன்று போகும்.


பண்டித ஜவாஹர்லால் நேருவைத் தலைவராகக் கொண்ட மத்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் இது விஷயத்திலேதான் உடனே கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியா தேசத்திலே உற்பத்தியாகக் கூடிய எல்லாப் பொருள்களையும் உடனே பெருக்க முயல வேண்டும். ஒன்றுக்கு இரண்டு மடங்கு, மூன்று மடங்கு, ஐந்து மடங்கு என்று பெருக்குவதற்குத் திட்டம் போட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

உடனே உள் நாட்டில் உற்பத்தியாகக் கூடாத சாமான்களை — ஜனங்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை — வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்குரிய தடைகளை நீக்கிவிட வேண்டும்.

அரசியல் பிரச்னைகளும் தகராறுகளும் குழப்பங்களும் எவ்வளவு இருந்தபோதிலும், இந்த முக்கியமான காரியத்தில் மத்திய தேசிய சர்க்காரும் மாகாண காங்கிரஸ் சர்க்கார்களும் உடனே ஈடுபட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

நிகழ்ச்சிச் சித்திரம்







படித்துப் பார்!

சுதந்திரமா அல்லது பாகிஸ்தானா?

[ஆசிரியர்: பி. எஸ். பிள்ளை; வெளியிட்டோர்: தாம்ஸன் அண்ட் கோ, லிமிடெட்; முழு விற்பனை உரிமையாளர்கள்: தமிழ் நாடு வெளியீடு, 38, பிராட்வே, சென்னை; விலை: ரூ. 2.]

இந்தியாவிலே பாகிஸ்தான் ஏற்பட்டால் அதன் விளைவு என்ன ஆகும் என்பதை இந்த நூலாசிரியர் வெகு தெளிவாகவும் காரசாரமாகவும் ஆணித்தரமாகவும் எழுதியிருக்கிறார். பாகிஸ்தான் மீது அவருக்குள்ள கோபத்தின் காரணமாகக் காந்திஜியும் ராஜாஜியுங்கூட அவருடைய கண்டனத்திற்கு உள்ளாகிறார்கள். காந்திஜியும் ராஜாஜியும் மாத்திரம் என்ன, யாரையுமே பாக்கி வைக்கவில்லை—நம்மைத் தவிர! அத்தகைய கண்டனங்களுக்கு மத்தியிலே, பாகிஸ்தானைப் பற்றியும் ஓரளவு ஆராய்ந்து அதன் உண்மைகளை வெளியிட்டிருப்பது ஏனமாக இருக்கிறது.

பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ்

[ஆசிரியை: த. பதுமாவதி அம்மாள்; பிரசுரம்: புத்தக நிலையம், இராயவரம், புதுக்கோட்டை ஸ்டேட்; விலை: ரூ. 1—8—0.]

கண்ணனிடம் கொண்ட பக்தி பெரியாழ்வாருக்கு வாத்ஸல்யமாக மாறியது. கண்ணனைக் குழந்தையாகப் பாவனை செய்து கொண்டு, தம்மைத் தாயாகப் பாவித்துக் கொண்டார். அந்தக் கணமே அவருக்குக் கவிதையூற்று சுரந்தது. கண்ணனைத் தொட்டிலில் இட்டுத் தமிழில் அழகிய இனிய பாக்களைச் செய்தார். எத்தனை எத்தனையோ விதங்களில் குழந்தை கண்ணனைத் தாமும் அனுபவித்து, நம்மையும் அனுபவிக்கச் செய்தார். தமிழ் உள்ளவரை அழியாப் புகழுடன் விளங்கப் போகும் அந்த நூலை ஸ்ரீமதி பதுமாவதி அம்மாள் வசன நடையில் எழுதி, இடை இடையே பாசுரங்களிலிருந்து சில அடிகளை எடுத்து மேற்கோள்களாகக் காட்டியிருக்கிறார்.

பெரியாழ்வாரின் பாடல்கள் மிகவும் எளிமையானவை. இதை உணர்ந்துதான் அம்மையார் தமது வசன நடையைச் சற்று வாசகர்களுக்குச் சிரமம் அளிக்கும் முறையில் எழுதியிருக்கிறாரோ என்று தோன்றுகிறது!

கந்தபுராணத் திரட்டு

[தொகுத்தவர்: ஸ்ரீ சா. பி. சேதுப் பிள்ளை; பிரசுரம்: அல்லையன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; விலை: ரூ. 2—4—0.]

என்னதான் தீயிட்டுக் கொளுத்தினாலும், கச்சியப்பரோ, கந்தபுராணமோ, முருகக் கடவுளோ தமிழ் நாட்டை விட்டும், தமிழர்களின் உள்ளத்தை விட்டும் மறையப் போவதில்லை என்பதற்கு இந்த நூல் ஓர் உதாரணமாகும். "கந்த புராணத் திரட்டு" என்ற தலைப்பின் ஏற்கனவே இரண்டு புத்தகங்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில் ஒன்று உற்பத்தி காண்டத்தைக் கொண்டதாகும். இன்னொன்று அசுர காண்டத்தையும் மகேந்திர காண்டத்தையும் கொண்டதாகும். மூன்றாவதாக வெளியாகியிருக்கும் இந்த நூலில் யுத்த காண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம் ஆகிய மூன்றும் அடங்கியிருக்கின்றன. தமிழ் மக்களுக்கு முருகனின் பெருமையை உணர்த்துவதிலேயே தாமும் பெருமை பெற்ற ஸ்ரீ சா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பதவுரையைக் கைவிட்டு விட்டுப் பொழிப்புரையுடன் திருப்தியடைந்திருப்பது நாமும் திருப்தி யடையக் கூடியதாயிருக்கிறது.

தமிழ் கற்பிக்கும் முறைகள்

[ஆசிரியர்: வி. கே. சேஷாத்திரி பி. ஏ., எல். டி., பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், தெப்பக்குளம், திருச்சி; விலை: ரூ. 2—0—0.]

அன்பின் விளைந்த அருந்தமிழ் என்றும், இன்பம் விளைக்கும் இனிய தமிழ் என்றும் சிறப்பித்துப் பேசப்படும் நம் அமுதத் தமிழ் மொழியைக் கற்பிக்கும் முறையையும் கற்கும் முறையையும் இந்த நூலில் விவரமாகக் காணலாம். இந்த நூலைப் படிப்பவர்கள், அழகொழுகும் தமிழ் மொழியைக் கற்பிப்பதில் இவ்வளவு சிரமம் இருக்கிறதா என்று ஐயுறக் கூடும். நூலைப் படித்து முடித்தால் அந்த ஐயம் பயமாகவே மாறினால் அதில் அதிசயம் ஒன்றும் இல்லை.

தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் இலக்கணச் சுருக்கம், தமிழும் ஆசிரியரும், வாசிக்கும் விதம், செய்யுள் என்றால் என்ன, உரைநடை என்றால் என்ன என்பன போன்ற பல விஷயங்களைச் சாங்கோபாங்கமாக விளக்கியிருக்கிறார் நூலாசிரியர். போதாக் குறைக்குப் பரீட்சைத் தாள்கள் வேறு சேர்த்திருக்கிறார். தமிழ் மொழியைக் கற்பிப்பதில் உள்ள சிரமங்களைச் சிரமமில்லாமல் இருநூற்றுத் தொண்ணூறு பக்கங்கள் எழுதியிருக்கும் ஆசிரியரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.


நீல மாளிகை

[ஆசிரியர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ: பிரசுரம்: புத்தக நிலையம், ராயவரம், புதுக்கோட்டை ஸ்டேட்; விலை: ரூ. 3.]

பல கதைகள் அடங்கிய இப் புத்தகத்தில் சில கதைகள் சோகத்தில் முடிந்து நம்மையும் ஒரே சோகத்தில் ஆழ்த்தி விடுகின்றன. சில கதைகள் இன்பத்தில் முடிந்து நம்மையும் இன்பத்தில் ஆழ்த்திவிடுகின்றன. சாவின் கோரத்தைக் காட்டி நம்மைப் பயப்பிராந்தியில் ஆழ்த்தும் சிறு கதையும் இந்நூலில் இருக்கிறது.


புத்தகத்தைப் படித்து முடித்ததும், "அப்பா! இனிப் பயமில்லை, துன்பமில்லை, இன்பமில்லை, சிந்தையை முறிக்கும் சோகமுமில்லை!"—என்று ஒரு நிம்மதியும் உண்டாகிறது. ஆனால், மேலட்டைப் படம் இந்த உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட கதைகளுக்கு இழுக்கு கற்பிப்பதாக இருக்கிறது என்பதைக் கூறாமல் இருக்க முடியவில்லை. சிந்தனையின் ஆழத்தில் வைத்திருக்க வேண்டிய சில விஷயங்களை அம்பலப் படுத்தினால் தான் இலக்கியமாகுமா, என்ன?

சிறு சேமிப்புக்காரருக்குரிய ஒரு பிரச்னையைத் தீர்ப்பது



பிரச்னை : ஆறு தீக் குச்சிகளைக் கொண்டு நான்கு முக்கோணங்கள் அமைக்கவும்.

விடை : ஒரு மேஜையின்மேல் 3 தீக் குச்சிகளை ஒரு முக்கோண வடிவமாக அமைக்கவும்; மீதி மூன்றைக் கொண்டு, படத்தில் காட்டியுள்ளபடி கூர்நுதிக் கோபுரம் ஒன்றைப் பூர்த்தி செய்யவும்.



இக்கலை பிரச்னைகள் அறிவைத் தூண்டுவதுமின்றி, ஓய்வு நேரங்களில் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கின்றன. ஆனால், பொருளாதாரப் பாதுகாப்பைப்பற்றிய மிகத் தீவிரமான பிரச்னையும் இருக்கிறது. இப் பிரச்னையினால் நீர் சஞ்சலம் எதுவும் அடைய வேண்டியதில்லை. எளிதில் திட்டம் போட்டுச் சேமிப்பதினால் நீர் இப் பிரச்னையைத் தீர்க்க முடியும். நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளையும் ஸ்டாம்புகளையும் வாங்கி அதன் மூலமாய்த் தங்கள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பவர்களின் கூட்டத்தில் நீர் சேர்ந்தால் வருஷந்தோறும் உம்முடைய சேமிப்பு பெருகிக்கொண்டே வருவதுமல்லாமல், உமக்குரிய பாதுகாப்பும் அதிகமாகிக் கொண்டே வரும். மேலே கண்டபடி செய்பவர்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பதற்குரிய மிக சிறந்த சாதனமாகும். அவைகளிலிருந்து அதிகபட்ச லாபம் கிடைப்பதோடு, அவைகளில் போட்டுவைத்த பணம் மிகப் பத்திரமாகவும் இருக்கிறது.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்.

இவை முக்கியமான அனுகூலங்களாகும் :—

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவரா யிருந்தாலுஞ் சரி மைனராயிருந்தாலுஞ் சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்கமுடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவிகிதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மெண்ட் பத்திரத்தின்மேல் கிடைக்கக் கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 3 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வைப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸ்களிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற ஏஜென்டுகளிடமாவது, ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக் கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்

கார்த்திகை தீபம்

கி. ரா. கோபாலன்

அன்று திருக் கார்த்திகை. அவள் உள்ளேயிருந்து ஒவ்வொரு அகல் விளக்காக எடுத்துக்கொண்டு வந்து வாசல் திண்ணை, படிக்கட்டு இவைகளில் வரிசையாக வைத்துக் கொண்டிருந்தாள்.

அவன் எதிர்வீட்டு மாடியிலிருந்து அவள் ஒவ்வொரு விளக்காகக் கையிலேந்தி நாசூக்காக நடந்து வரும் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளுடைய அழகு—அதுவும் அன்று அவள் செய்து கொண்டிருக்கும் விசேஷ அலங்காரங்கள்—அவன் மனதைக் கவர்ந்தன. வைத்த விழி மாறாது எதிர் வீட்டையே நோக்கிக் கொண்டிருப்பதில் அப்பொழுது அவனுக்கு அலுப்பே ஏற்படவில்லை.

திண்ணை முழுவதும் விளக்கு வைத்தாகி விட்டது. பெரிய குத்து விளக்கு ஒன்றைக் கொண்டு வந்து நடுத் திண்ணையில் வைத்து விட்டுக் கம்பீரமாக நான்கு புறமும் தன் பார்வையைச் செலுத்தினாள், எல்லாம் வைத்த இடத்தில் சரியாக இருக்கிறதா என்று அதிகார தோரணையில் பார்ப்பது போல்.

திண்ணைக் கோடியிலிருந்த விளக்கு அணைந்திருந்தது ஏதோ மூளி செய்தது போலிருந்தது. அந்தச் சிறிய அகல் விளக்குக்குக் காற்றின் வேகத்தைச் சமாளிக்கும் சக்தியில்லை. அதுவும் எவ்வளவோ காற்றோடு போராடித்தான் அணைந்தது. பாவம்! ஒரு நிமிஷங்கூட அந்தப் பூர்ணமான ஒளியழகைக் கண்டு ரஸிக்க முடியாவிட்டால் அவள் மனம் எப்படி இருக்கும்? சட்டென்று போய் அந்த விளக்கை எடுத்து வேறொரு விளக்கில் ஏற்றி வைத்தாள். ஆனால் காற்று சும்மா யிருந்தால்தானே? முதல் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு அவள் திரும்புவதற்குள் வேறொரு பக்கத்தில் இன்னொரு விளக்கு அணைந்தது. அவசர அவசரமாகச் சென்று அதையும் கொளுத்தி வைத்து விட்டுத் தலை நிமிருவதற்குள் நடுவிலிருந்த விளக்கொன்று அணைந்தது.

எவ்வளவு தடவை இப்படி மாறி மாறி விளக்குகளை ஏற்றி வைக்க முடியும்? "அப்பப்பா! சனியன் பிடித்த காற்று! இன்றைக்குத்தான் இப்படி அடிக்கணுமா?" என்று அலுப்போடு சோர்ந்துகொண்டு முயற்சியைக் கைவிடாது ஆறாவது தடவையாக அணைந்த விளக்கை ஏற்றி வைக்கப் போனாள். இவைகளையெல்லாம் மாடியிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த கைலாசத்துக்கு முன்னிலும் அதிகமான ஸ்வாரஸ்யமும் சிரிப்புமாக இருந்தது.

தெய்வ அனுக்கிரகமோ அல்லது காற்று தான் அவளுக்குப் பயந்து அடங்கியதோ, எல்லா விளக்குகளும் காற்றில் அலைபடாது கம்பீரமாக நின்று ஒளி செய்தன. அவள் முகத்தில் ஒரு பிரகாசம். அவளுடைய குறுகுறுப்பான விழிகளில் ஆர்வம் பொங்கப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

கைலாசம் அவளுடைய அழகை இன்னும் சற்று நெருங்கி வந்து பார்க்க ஆசைப் பட்டான் போலிருக்கிறது. சட்டென்று மாடியிலிருந்து கீழே இறங்கி வாசற் பக்கம் வந்தான். வாசற்பக்கம் வந்ததும் அவன் மனதில் சுருக்கெனப் பட்டது. எல்லா விளக்குகளும் அணைந்து விட்டன. பிறையில் வைத்திருந்த ஒரு விளக்கு மாத்திரம் காற்றோடு போராடிக் கொண்டிருந்தது. விளக்குகளையெல்லாம் தானே ஏற்றி வைக்கலாமா என்று கைலாசம் ஒரு கணம் யோசனை செய்தான். ஆனால் ஏனோ அவனுக்கு உசிதமாகப் படவில்லை. பரபரப்போடு சமையல் அறையிலிருந்த தன் தாயாரை நெருங்கி, "அம்மா! வாசல்லே வைத்த விளக் கெல்லாம் அணைந்து போயிடுத்தே!" என்றான்.

"ஆமாம்! நான் ஒருத்தி எதைத்தான் கவனிப்பேன்? விளக்குக்குக் காவலா வாசலிலேயே உட்கார்ந்திருந்தா வீட்டுக் காரியத்தை யார் செய்யறது? நீதான் எல்லாத்தையும் கொளுத்தி வையேன்!"

"நானா?"

"ஆமாம், வேறே யார் இருக்கா இந்த ஆத்திலே? நீதான் ஏற்றி வைக்கணும். நீதான் பெண்ணுக்குப் பெண்ணா பிள்ளைக்குப் பிள்ளையா இருக்கே! ஈசுவர சங்கல்பத்திலே அடுத்த வருஷம் கார்த்திகைக் காவது......" என்று ஆரம்பித்தாள் தாயார்.

கைலாசம் தன் தாயாரின் வார்த்தைகளை அவ்வளவாகக் காதில் வாங்கவில்லை. தான் விளக்கேற்றி வைப்பதனால் எவ்வித தோஷமும் இல்லை என்று தன் தாயாரின் வாக்கிலிருந்து வந்ததுதான் தாமதம். அவசர அவசரமாக வாசல் திண்ணைக்கு வந்து விளக்குகளைக் கொளுத்தி வைக்க ஆரம்பித்தான்.

எதிர் வீட்டில் எல்லா விளக்குகளும் சோபையுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தன. புஷ்பா, தான் ஏதோ ஒரு பெரிய காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தவன்போல் அலக்ஷியமான புன்னகை மிளிர நின்றுகொண் டிருந்தாள்.

கைலாசம் ஒவ்வொரு அகல் விளக்காக ஏற்றி வைக்க ஆரம்பித்தான். ஒவ்வொரு விளக்காக அவன் கொளுத்தி வைக்க ஒவ்வொன்றாக அணைந்து கொண்டிருந்தது. எத்தனை தரம் திரும்பத் திரும்ப ஏற்றி வைப்பது? அலுப்படைந்து எதிர் வீட்டைப் பார்த்தான். புஷ்பா வீட்டு விளக்குகளும் அணைந்துகொண்டிருக்கும் என்பது அவன் எண்ணம். ஆனால் பெருத்த ஏமாற்றம்! அவள் வீட்டு விளக்குகள் முன்போல் கம்பீரமாகவே எரிந்து கொண்டிருந்தன. புஷ்பாவும் தூணுக்குப் பக்கத்தில் பிரகாசமான முகவிலாசத்தோடு கம்பீரமாக நின்று கொண்டிருந்தாள். அவளுடைய பார்வை கைலாசத்தின் விளக்கேற்றும் முயற்சியை வேடிக்கை பார்ப்பதுபோ லிருந்தது. அவளுடைய அலக்ஷியமான பரிகாச முறுவல் அவனை வெட்கமடையச் செய்தது. பாவம்! அந்தப் பொல்லாத காற்று ஏதோ வஞ்சம் தீர்த்துக் கொள்வதுபோல் அப்பொழுது கைலாசத்தின் வீட்டுப் பக்கமாக வீச ஆரம்பித்திருந்தது. இருந்தாலும் அவன் மன உறுதி தளராது மறுபடியும் ஒவ்வொரு விளக்காக ஏற்றி வைப்பதில் முனைந்தான்.

'களுக்'கென்று சிரிப்பொலி கேட்டுத் திரும்பினான் கைலாசம். சிரித்தது புஷ்பா தான். அவளைத் தலை நிமிர்ந்து பார்க்கக்கூட அவனுக்கு அப்பொழுது வெட்கமா யிருந்தது. அந்தச் சிரிப்பைத் தொடர்ந்தே களிரென்ற வார்த்தையும் அவளிடமிருந்து வந்தது. "ஆயிர மிருந்தாலும் இதுக்கெல்லாம் புருஷாளுக்கு சாமர்த்தியம் போதாது!" என்றாள் அவள். மறுபடியும் ஒரு களீரென்ற சிரிப்பு!

கைலாசம் ஏதோ அர்த்தமற்ற கோபத்துடன் எதிர்வீட்டை நோக்கினான். அப்பொழுதுதான் அவள் அவசர அவசரமாக உள்ளே போய்க் கொண்டிருந்தாள்.

அவன் உள்ளே வந்தபொழுது அவனுடைய தாயார் எங்கோ விட்ட கதையை மறுபடியும் ஆரம்பிப்பவள்போல் அவனிடம் பேச ஆரம்பித்தாள்.

"ஏண்டா கைலாசம்! எதிராத்திலே ஒரு பொண்ணிருக்கே, தெரியுமோ?"

அவன் தாயார் புஷ்பாவைத்தான் சொல்லுகிறாள் என்று அவனுக்குத் தெரியாமலில்லை. இருந்தாலும் "தெரியும்" என்று அசிரத்தையாகப் பதிலளித்தான்.

"அந்தப் பொண் ரொம்ப சூடிகை! ரொம்ப நன்னா பாடும். கலகலன்னு வந்தவாளோடே பேசிண்டு...... ரொம்ப சமர்த்து ... சாமர்த்தியம் ......"

"ரொம்ப சமர்த்துத்தான் ......ஆனால் அசாத்ய வாய்த் துடுக்கு!"

"அப்படின்னா உன் மனசுக்கு அந்தப் பெண் பிடிக்கல்லேன்னு சொல்லு! நேத்திக்கி அவாத்துக்குப் போனேன். அந்தப் பொண்ணுடைய தாயார் ஜாதகத்தைக் கொடுத்தா. எனக்கென்னமோ பொண் மனசுக்குப் பிடிச்சிருக்கு. ஜோஸ்யர் மாமாகிட்டே ஜாதகத்தைக் கொடுத்துப் பொருத்தம் பார்க்கச் சொன்னேன். ரொம்ப நன்னா யிருக்கு, இந்தத் தை மாதத்திலேயே கல்யாணத்தை முடிச்சுடும் னேன்னு சொன்னார். எனக்கென்னமோ அந்தப் பொண் பாக்குப் பளிச்சா அழகா இருக்கு. காசு பணம் கிடக்கு ...... ஆனா உனக்கும் பிடிக்க வேண்டாமா?"

"என் மனசுக்கும் பிடிச்சிருக்கு, அம்மா! ஆனாலும் கொஞ்சம் வாய்த் துடுக்கா இருப்பாள் போலிருக்கே!"

"சின்னஞ் சிறிசுதானே! அப்படித்தா னிருக்கும். அப்படிக் கலகலப்பா பேசிண்டிருந்தாத்தான் நல்லது. வீடும் சோபிதமா யிருக்கும். ஊமைக் கோட்டான் மாதிரி யிருந்தால் வீட்டிலே எப்படி சந்தோஷ மிருக்கும்?"

"ஆமாம்! இப்படித்தான் இருக்கணும். இதுதான் என்னுடைய மனசுக்கும் ரொம்பப் பிடிக்கும்" என்று தன் தாயாரிடம் கைலாசம் சொல்லியபோது யாராவது பார்த்திருந்தால், ஆயிரக் கணக்கான தீபங்களால் அன்று தெருவுக்கு ஏற்பட்டுள்ள பிரகாசமும் சோபிதமும், அவனுடைய முகத்தில் தோன்றிய பிரகாசத்துக்கு ஈடாகாது என்பதைக் கண்டிருப்பார்கள்!

வானசஞ்சாரம்

இரு நிலையங்களிலும் பல உயர்தரக் கச்சேரிகள் அமைந்ததே சென்ற வாரத்திய விசேஷம்.

மனோஹரி ராகம் ஆரம்பச் சிக்ஷையில் கீதம் படிப்பதற்காக உபயோகப்படுகிறதே தவிர, தனியாய் ஆலாபனை செய்யப்படுவது அரிது. அந்த அபூர்வ ராகத்தைப் பாருபள்ளி ராமகிருஷ்ணய்யா பந்துலு 7-ல் தமது சென்னைக் கச்சேரியில் ஆலாபனை செய்து விளக்கியது மெச்சத்தக்கது. அத்துடன் ரேடியோவில் கம்பீரமாய்க் கேட்ட அவரது குரலிலிருந்து தேசலில்லாத தெளிவுடன் கம்பீரநாட்டை, ராமப்ரியா ராகங்களும், இறுதி ராகமாலிகையும் ஸ்வரபாவம் நிறைந்த நற்சொரூபங்களாய் வெளிவந்தன. உருப்படிகளெல்லாம் சாஹித்யத் தெளிவும் சங்கதி வளப்பும் கொண்டிருந்தன.

நயமாய் இழையும் சாரீரம், சுருதி சுத்தம், பிர்க்காப் பொழிவு, வெகு சுகமான வழி எல்லாம் சேர்ந்தால் ஒரு கச்சேரி மனங்கவராதிருக்குமா? அத்தகைய நிகழ்ச்சி திருச்சியிலிருந்து 12-ல் கேட்டது. பாடியவர் கே. ஆர். குமாரசாமி. கற்பனை நிறைந்த அழகு சஞ்சாரக் கோவைகளுடன் விஸ்தாரமாய் வெளிவந்த தோடிக்கே முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். அத்துடன் பேகடா, பைரவி, கேதாரகௌளை ராகங்களும் 'அந்தருணம்', 'கோலுவமரகத' உருப்படிகளில் நிரவல் ஸ்வரங்களும் சிறப்பா யிருந்தன.

நாதஸ்வரத்தில் அடங்கிய நாதக் குளிர்ச்சி என்றால் திருவெண்காடு சுப்ரமணியம் பிள்ளையின் பெயர்தான் எல்லோருக்கும் முதலில் ஞாபகம் வரும். 13-ல் திருச்சியில் நடந்த அவரது கச்சேரியில் ஸிம்மேந்திர மத்யம ராகம், பல்லவி ராகமாலிகை வெகு சுகமாய்க் காதை நிரப்பியது. அத்துடன் வராளி, தன்யாஸி, ஹரிகாம்போதி ராகங்களும் வளப்பா யிருந்தன.

ரேடியோவில் சில மாதங்களாய்க் கேட்டிராத இனியதோர் கானம் 14-ல் சென்னையிலிருந்து கேட்டது. பாடியவர் கே. பி. சுந்தராம்பாள் என்றாலே ரஸிகர்களுக்கு ஒரு தனி உற்சாகம் வந்துவிடும். அவருக்கு விசேஷமான ஸிம்மேந்திர மத்யமும், இறுதி ராகமாலிகையும் பாவப் பொழிவுடன் மனங் கவர்ந்தன. ஆரபி, பந்துவராளி ராகங்களும் சுகமா யிருந்தன. சாஹித்யத்தின் அர்த்த பாவத்துக்கேற்ப ராகபாவத்தைப் புகுத்தி மனமுருக்கும் வேலைப்பாடுகளுக்கு இடங் கொடுக்கும் சங்கதி நிரவல்களை அநேகமாய் எல்லா உருப்படிகளிலும் அமைத்ததே அவர் கச்சேரியின் விசேஷம். ஹரிகாம்போதியில் அவர் பாடிய 'வல்லகாதநாத' என்ற உருப்படிக்கு ராகம் சங்கராபரணம் என்று ஒரு புத்தகத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

16-ல் திருச்சியிலிருந்து கேட்ட டி. கே. ரங்காச்சாரியின் முழு நேரக் கச்சேரி எதிர்பார்த்ததுபோல் உயர்தரமா யிருந்தது. சங்கராபரணம் விஸ்தாரமாயும் நிதானமாயும் இழைந்து வந்தது. சாவேரியும் பல்லவி ராகமாம் கீரவாணியும் சுகமா யிருந்தன. 'ஸ்வரராகஸுதா' கிருதியின் அநுபல்லவியில் அமைந்த நிரவல் உற்சாகத்தில் இரண்டாவது அடியைப் பாடாமலே மேலே போய்விட்டார். 'ஏன் பள்ளி கொண்டீரய்யா' உருப்படியில் சாஹித்ய உச்சரிப்பு இன்னும் சிறிது தெளிவா யிருந்திருக்கலாம்.

* * *

திருச்சியிலிருந்து 6-ல் வாசித்த திருவீழிமிழலை மீனாக்ஷிசுந்தரம் சகோதரர்கள் வாசித்த நாதஸ்வரம் சுகமா யிருந்தது. ஹரிகாம்போதிக்குப் பிறகு பல்லவிக்காக ஹம்ஸப்ரமரி என்ற அபூர்வ ராகத்தை எடுத்துக் கொண்டது போற்றத்தக்கது.

8-ல் சென்னையில் வி. ருக்மணியின் கானம் வழக்கம்போல் கனிசமாயிருந்தது. கனிப்பும் மதுரமும் கொண்ட குரலில் சாருகேசி, சாவேரி, அடாணா ராகங்களையும் உருப்படிகளையும் வெகு நிதானமாயும் தெளிவாயும் அழகாயும் பாடினார்.

அன்று அதே நிலையத்தில் த்வாரம் நரஸிங்கராவ் வாசித்த வயலின் வாத்யம் ஞானச் சிறப்புடன் சுகவழியும் கொண்டிருந்தது. கனராகப் பஞ்சகம், சுத்தாங்காரா, கீரவாணி ராகங்கள் வெகு நயமா யிருந்தன.

10-ல் சென்னையில் நாகசுப்பிரமணியம், ஸ்ரீனிவாஸ ராவ் இவர்களின் கச்சேரிகள் உயர்ந்த ரகமா யிருந்தன. முன்னவரது நாட்டைக் குறிஞ்சியும், பின்னவரது கல்யாணி காபி ராகங்களும் அவர்களது ஞானச் சிறப்பை நன்கு வெளிப்படுத்தின.

13-ல் சென்னையிலிருந்து கேட்ட என். ராஜலக்ஷ்மியின் கானம் இனிமையும் ஒழுங்கு முறையும் கொண்டு வசீகரமா யிருந்தது. ஆரபி, மோஹனம், வஸந்தா ராகங்கள் நற் சித்திரங்களா யிலங்கின. —இராந்தேவ்.



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

161. மாய மான்!

சீதைக்கு முன்னால் அழகான மான் வந்து நிற்கிறது. அதன் மேல் அவளுக்கு அபாரப் பிரியம் ஏற்பட்டு விட்டது. ராமனிடம் ஓட்ட ஓட்டமாய் ஓடிப் போய் மானைப் பிடித்துத் தரச் சொன்னாள்.

ராமன் பதில் சொல்லுவதற்கு முன் லக்ஷ்மணன் குறுக்கிட்டு, "இது ஏமாற்றமாய் இருக்கிறது. ஏமாற்றமாய் இருந்தால் அதைக் கொன்று விடுகிறேன். உண்மையான மானாய் இருந்தால் அப்படியே பிடித்து வருகிறேன்" என்று பக்குவமாகத் தான் சொன்னான்.

சீதைக்கு அது பொறுக்கவில்லை. ராமனைப் பார்த்து, "உன்னைத்தானே பிடித்துக் கொடுக்கச் சொன்னேன். நீயே போய்ப் பிடித்துத் தர உனக்கு மனம் இல்லை!" என்று அடங்காக் கோபத்தோடு கண்ணீர் வடித்த வண்ணமாய் அந்த இடத்தை விட்டு வேகமாய் நடந்து போய் விட்டாள்.

* * *

சாமான்யப் பெண் ஒருத்திக்கு ஒரு பொருளின் மேல் ஆசை இருந்தால் அவளைத் திருப்தி செய்ய வீட்டிலுள்ள ஆடவர் எல்லாரும் இணங்குவார்கள். ஏன், ஒருவருக்கு முன் ஒருவராகப் போட்டி போட்டு முந்துவார்கள்.

ஆனால் சீதை சாமான்யப் பெண்ணா? ஜனக மகாராஜன் புத்திரி அல்லவா! நாட்டை விட்டு, அரண்மனையை விட்டு, அருமைத் தாய் தந்தையர்களை விட்டுக் காலால் நடந்து காட்டுக்கு வந்தவள் அல்லவா? அவள் விரும்பிய காரியத்தை நாயகனும் நாயகனைச் சேர்ந்தவர்களும் எவ்வளவு ஆத்திரத்தோடு அவளைத் திருப்தி செய்ய முன் வர வேண்டும்? அவளுடைய மனசு கோணும்படி நடக்கத்தான் தோன்றுமா! அவளிடத்தில் எவ்வளவு பரிவு வேண்டும்!

ராமன் சீதையின் மனம் நொந்ததைப் பார்த்தான். "அந்த மானை நானே இதோ போய்ப் பிடித்து வருகிறேன்" என்று சொல்லி விட்டான்.

போனவள் புலவிநோக் கிப்
புரவலன், 'பொலன்கொள்தா ராய்!
மானிது நானேபற் றி
வல்லையின் வருவென்அன் றே,
கானியல் மயில்அன்னா ளைக்
காத்தனை இருத்தி' என் னா,
வேல்தரு சரமும்வில் லும்
வாங்கினன் விரையல்உற் றான்.

[போனவள் புலவி நோக்கி: கோபித்துப் போன சீதையின் வருத்தத்தைப் பார்த்து; புரவலன்: ராமன்; பொலன் கொள் தாராய்: அழகு வாய்ந்த மாலையை அணிந்த லக்ஷ்மணனே; மான் இது நானே பற்றி: நீ சொன்ன மானை நானே பிடித்து; வருவென் அன்றே: சீக்கிரத்தில் வருவேன் பார்; கான் இயல் மயில் அன்னாளை: வனத்தோடு வனமாய்த் திரியும் மயிலை ஒத்த சீதையை; காத்தனை இருத்தி என்னா: காத்துக்கொண்டிருப்பாயாக என்று சொல்லி; வேல் தரு சரமும் வில்லும் வாங்கினன்: வேல்தானோ என்று சொல்லும்படியாக—அத்தனை பெரிய அம்பையும் வில்லையும் கையில் எடுத்தவனாய்; விரையல் உற்றான்: வேகமாய்ச் சென்றான்.]

* * *

ராமன் போவதை லக்ஷ்மணன் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் செய்ய இயலவில்லை. இருந்தாலும், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் இந்த விஷயத்தில் என்று ஆத்திரத்தோடு சொல்லுகிறான்:

"விசுவாமித்திரர் யாகஞ் செய்த போது, மூன்று அரக்கர்கள் வந்து எதிர்த்தது உனக்குத் தெரியும்

இருவர் மாண்டு, ஒருவன் தப்பி ஓடினான் என்பதும் ஞாபகமிருக்கலாம். அப்படித் தப்பி ஓடியவன்தான் மாரீசன். அந்த மாரீசனே இந்த மானாக வேஷம் போட்டுக்கொண்டு வந்திருக்கிறான் என்று சந்தேகிக்கிறேன். இது உண்மை என்றே நீ அறியப் போகிறாய்!"

'முன்னவன் மகவாய்,வந் த
மூவரின் ஒருவன்போ னான்;
அன்னமா ரீசன்என் றே
அயிர்த்தனென் இதனை;ஐ ய!
இன்னமும் காண்டி,வா ழி
ஏ(கு)'என,— இருகைகூப் பிப்,
பொன்னனான் புக்கசா லை
காத்தனன், புறத்துநின் றே.

[முன்னவன் மகவாய்: பெரியோனாகிய விசுவாமித்திரர் யாகத்திலே; மகம்: யாகம்; மூவரின் ஒருவன் போனான்: மூன்று அரக்கர்களில் ஒருவன் தப்பிப் போனான்; அன்ன மாரீசன் என்றே அயிர்த்தனென் இதனை: அப்படித் தப்பிப்போன மாரீசனே இந்த மான் வேஷம் பூண்டிருக்கின்றான் என்று எண்ணுகிறேன்: இன்னமும் காண்டி: இனி இந்த விஷயத்தை நீ நன்றாகக் காணப் போகிறாய்: வாழி ஏகு என: க்ஷேமமாய்ப் போய் வருவாயாக என்று: பொன் அன்னாள் புக்கசாலை: லக்ஷ்மியை ஒத்த சீதை கோபத்தோடே புகுந்த சாலையைக் காத்தான; புறத்து நின்றே: வெளியிலே நின்றவனாய்க் காத்துக் கொண்டிருந்தான், ராமன் போன திசையைப் பார்த்து இரு கை கூப்பியவனாய்.]

* * *

நடந்து போகும்போது ராமன் யோசனை செய்கிறான்:

"லக்ஷ்மணன் நன்றாய் யோசனை செய்துதான் சொல்லுகிறான். இதற்கு நாம் என்ன செய்கிறது? தடுக்க முடியாத காரியமாக அல்லவா இருக்கிறது! இது ஒரு வேடிக்கைதான்!" என்று தனக்குள்ளேயே சிரித்துக் கொள்ளுகிறான்.

மந்திரத்(து) இளையோன்சொன் ன
வாய்மொழி மனத்துக்கொள் ளா,—
சந்திரற்(கு) உவமைசான் ற
வதனத்தான் சலத்தைநோக் கிச்,—
சிந்துரப் பவளச்செவ் வாய்
முறுவலன், சிகரச்செவ் விச்
சுந்தரத் தோளினான், அம்
மானினைத் தொடரல்உற் றான்.

[மந்திரத்து இளையோன் சொன்ன: யோசனையோடு கூடிய தம்பி சொன்ன; வாய்மொழி மனத்துக் கொள்ளா: ஆத்திரம் கொண்ட வார்த்தையை நன்றாய் அங்கீகரித்தவனாய்; (கொள்ளா: கொண்டு) சந்திரற்கு உவமை சான்ற: சந்திரனைப் பார்த்தால்— அடடா, இதுதான் சீதையின் முகமோ என்று சொல்லும்படியான; சலத்தை நோக்கி: முகத்திலுள்ள வருத்த பாவத்தைப் பார்த்து: சிந்துரப் பவளச் செவ்வாய் முறுவலன்: சிவந்த பவளம் போன்ற இதழ்களுக்குள் சிரிக்கின்ற பல் வரிசை தோன்றியவனாய்: சிகரச் செவ்விச் சுந்தரத் தோளினான்: மலைச் சிகரமே போலும் அழகிய தோளினனான ராமன்; அம்மானினைத் தொடரல் உற்றான்: அந்த மானைத் தொடர்ந்து போனான் ராமன்.

குறிப்பு:—அரக்கர்கள் என்றால் அவ்வளவு அலட்சியம் ராமனுக்கு. அதனால்தான் காரியமாக லக்ஷ்மணன் சொன்னதைக் கேளாமல் சீதைக்கு வந்த கோபத்தைப் பார்த்துச் சிரிக்கிறான்.]

* * *

மான் நின்ற இடத்தை நெருங்கிவிட்டான். மான் என்ன செய்கிறது?

மெல்ல மெல்லவே காலை எடுத்து வைக்கிறது. ஓட்டமில்லை. அப்படியே வெறித்துப் பார்க்கிறது. திடீர் என்று பயந்து நிலத்தை விட்டு மேலே குதிக்கிறது. அடுத்தாற்போல் பயங்கொண்டதாய்க் காதை நிமிர்த்தி நிற்கிறது. உடனே நாலு குளம்பையும் மார்போடு ஒட்ட வைத்துக் கொண்டு மேலே துள்ளுகிறது. ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து விடுகிறது!

மிதித்தது மெல்லமெல் ல,
வெறித்தது, வெருவிப் நிலக்
குதித்தது, செவியைநீட் டிக்
குரபதம் உரத்தில்கூட் டி
உதித்தெழும், ஊதைஉள் ளம்
என்றிவை உருவச்செல் லும்,—
கதிக்கொரு கதியும்வே றே
காட்டிய(து) ஒத்ததன் றே.

[மிதித்தது. வெறித்தது. குதித்தது: மிதித்து வெறித்து குதித்து: குரபதம் உரத்தில் கூட்டி: நான்கு குளம்புகளையும் ஒன்றாய்ச் சேர்த்து மார்பில் ஒட்டியதாய்: உதித்து எழும்: மேலே தாவும்: ஊதை உள்ளம் என்று

இவை உருவச் செல்லும்: வாயு வேகம் மனோ வேகம் என்றெல்லாம் சொல்லுகிறோர்கள்: மானின் வேகத்தைப் பார்த்தால் அவைகளையே ஊடுருவி (அவைகளுக்கு முன்னால் போய்) வெற்றி அடையும் என்று சொல்லத் தோன்றும். அப்படி வேகமாய்ப் போயிற்று மான்; கதிக்கு ஒரு கதியும் வேறே காட்டியது ஒத்தது அன்றே: வேகமாகிய தத்துவத்துக்கு வேறொரு தனியான வேகத்தை அந்த மான் காட்டிய மாதிரி இருந்தது.

குறிப்பு:—மானின் பற்பல செயலையும், பறக்கிறதோ என்று சொல்லும்படி பாய்ந்தோடும் வேகத்தையும், நேர் நேராகப் பார்த்து அனுபவித்திருந்தால்தான் இந்தக் கவியிலுள்ள விஷயங்கள் நமக்கு விளங்கும். கம்பர் அவைகளை ரொம்பநன்றாய் அனுபவித்திருக்கிறார்.]

* * *

மான் வேறு என்ன செய்கிறது பார்க்கலாம்.

ஏதோ மறைந்ததாகத் தோன்றியது. திடீர் என்று ஒரு குன்றின் முகட்டில் நின்று, தனியாக விளங்குகிறது. உடனே அங்கு தவழ்ந்து நிற்கும் மேகத்துக்குள் பாய்கிறது. மலை முகட்டை ஒட்டியே நாமும் போனோமானால், அது மறைந்து விடுகிறது. சற்றே நாம் தாமதித்தால், இதோ பிடித்து விடலாம் என்று தோன்றும்படி நெருங்கி நிற்கிறது. நிற்குமானாலும் அப்படியே மறைந்து போய்விடும் — மாயமாய்ப் போனதுபோல.

குன்றிடை இவரும், மேகக்
குழுவிடைக் குதிக்கும், கூடச்
சென்றிடில் அகலும், தாழில்
நீண்டலாம் தகைமைத்தாகும்,
நின்றதே போலநீங்கும், —
நிறிவழி நேயம்நீட்டும்
மன்றலங் கோதைமாதர்
மனம்எனப் போயிற்றம்மா!

[குன்றிடை இவரும்: படம் பிடிப்பதற்காகக் குன்றின்மேல் தனித்து நின்ற மாதிரி நிற்கும்; மேகக் குழு இடைக் குதிக்கும்: பக்கத்தில் தவழ்ந்து நிற்கும் மேகக் கூட்டத்தினிடையில் பாய்ந்து விடும்; கூடச் சென்றிடில் அகலும்: மேகக் குழாத்தை விட்டு வெளியே வந்ததும் நமக்கு அதோடு ஒட்டிப் போகத் தோன்றும். அப்படிப் போனால் ஏதோ புதருக்குள் மறைந்து போய்விடும்; தாழில் நீண்டலாம் தகைமைத்து ஆகும்: கலைந்து போய் விட்டதே என்று பின் வாங்கி நின்றோலோ, யாதொரு கவலையும் இல்லாத மாதிரி நம் பக்கத்திலேயே நிற்கும். என், கையினால் தடவிக் கொடுத்து விடலாம் என்பதுபோல் நிற்கும்; நின்றதே போல நீங்கும்: தொடும்படியாக நின்றது உண்மை தான். நின்றதில் குற்றமில்லை. அயலப் பக்கம் நம்முடைய முகம் கொஞ்சம் திரும்ப வேண்டியது தான் தாமதம். மறுபடி திரும்பிப் பார்த்தால் காணாமலே போய்விடும்; நிறிவழி நேயம் நீட்டும்: காதலிருந்த போதிலும் அதை அப்படியே எருவாய் மறந்து விட்டு, பணமிருக்கிற திக்கை நோக்கிச் செல்லுகிற; மன்றலங் கோதை மாதர் மனம் என: பூமாலையால் அலங்கரித்த அழகிய கூந்தல் கொண்டுள்ள பகளிர் மனம் என; போயிற்று அம்மா: நீங்கிவிட்டது.]

மானின் சாயல், ஓட்டம், வேகம் இவைகளை நேரில் பார்த்திருந்தால், கம்பரது வர்ணனையின் உண்மையும் அழகும் மனசைக் கவரும். மாயத் தத்துவத்தை எப்படி மானுக்குள் ஏற்றியிருக்கிறது என்பதையும் அறிந்து அனுபவிக்க வேண்டும்.



★

முடியாதுதான்!

"என்ன ஸார் இது? தெருவெல்லாம் வெள்ளம். ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு, இங்கே தெப்பம் போட்டு விளையாடிண்டு இருக்கேளே?"

"என்ன செய்யறதுங்காணும்? ஆபீஸுக்குப் போகாமல் இருக்கலாம்; ரேஷன் ஷாப்புக்குப் போகாமல் இருக்க முடியுமோ?"

அபலை மீனா

'தாபன்'

ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய வாசுதேவன், "அம்மா! அம்மா! கடிதம் வந்திருக்கிறது. மாமாவுக்கு லீவு இல்லையாம். அத்தையை மாத்திரம் இன்று ரயிலில் அனுப்புகிறாராம். அவள் வந்து மீனாவை ஒரு நல்ல நாளில் அழைத்துக் கொண்டு போகப் போகிறாளாம்!" என்று சமயலறையில் இருந்த தாயாரிடம் சொல்லிக் கொண்டே வந்தான்.

தாயார் குத்து விளக்கைத் துலக்கிக் கொண்டிருந்தாள். மீனா அடுப்பருகில் உட்கார்ந்து காப்பி கலந்து கொண்டிருந்தாள்.

வாசுதேவன் கூறியவற்றை அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. சில வினாடிகள் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. அடுக்களை நடையில் ஒரு காலை மடக்கிக்கொண்டு சாய்ந்த வண்ணம் வாசுதேவன் மீண்டும் கேட்டான் :—

"என் அம்மா, ஒரு மாதிரி இருக்கிறாயே? என்? என்னடி மீனா? அம்மாளுக்கு என்ன?"

"எனக்கு ஒன்றுமில்லை; என்ன வந்து கிடக்கிறது!" என்று முணுமுணுத்தாள் தாயார், சுவரைப் பார்த்துக்கொண்டே. அவள் கரங்கள் உமியைக் கொண்டு குத்து விளக்கை இறுகத் தேய்த்துக்கொண்டிருந்தன.

வாசு மனதை அடக்கிக் கொண்டு மீண்டும் கடிதத்தை வாசித்தான் :—

"அம்மா அவர்களைக் கலந்து கொள்ளுங்கள். அவர்கள் மனம்போல் மீனாவை எப்போது அனுப்புகிறீர்களோ அப்போது அனுப்புங்கள்" என்ற பகுதியை வாசித்து விட்டு, "என்ன அம்மா சொல்லுகிறாய்?" என்று கேட்டான் வாசு. அவன் கேள்வியில் ஆத்திரம் பொங்கியது.

அம்மா ஒன்றும் பதில் சொல்லவேயில்லை.

"அம்மா மட்டுமா வருகிறாள்? நாளைக்குச் சாயங்காலம் வந்து விடுவாளா?" என்று ஆசை பொங்கக் கேட்டாள் மீனா.

"உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போயேண்டி!" என்று விசனமாகச் சொன்னான் வாசு. பாவம், மீனாவின் முகம் வாடிப் போய்விட்டது. பேசாமல் வேறு பக்கம் போய்விட்டாள் அசதியுடன். வாசுவும் பொறுமை இழந்தவனாக வாசற் பக்கம் எழுந்து போக யத்தனித்தான். அப்போது தாயார் ஏதோ முணுமுணுப்பது கேட்டு மீண்டும் உட்கார்ந்து கொண்டான்.

"என்னதான் கெடுகெட்ட ஏழையானாலும் செய்வதைச் செய்யத்தான் செய்வார்கள். வளைகாப்பு, சீமந்தம் என்றெல்லாம் உண்டு...ஆனாலும் இப்படிப் போவது உலகத்திலேயே கிடையாது. எல்லாம் நம் தலையெழுத்துப் போல்......"

"அம்மா! உனக்கு ஏதாவது பிடிக்கவில்லையென்றால் சொல்லு! மனதிலேயே வைத்திருக்காதே. சொல்லம்மா!' என்று கெஞ்சும் குரலில் கேட்டான் வாசு.

"எல்லாம் சொல்லிக் கிடக்கிறது! என்னிடம் என்னடா கேள்வி? என்னைக் கேட்டுத்தான் இந்த இரண்டு வருஷமாக நடந்து கொண்டாயா?—அவளிடம் கேள் : வீட்டு எசமானி உத்தரவுப்படி செய். என்னை என் பரிகாசம் பண்ணறே? அடுப்பங்கரை வேலைக்காரியிடம் என்ன கேள்வி வாழ்கிறது?" என்று ஆத்திரமும் கோபமும் பொங்கச் சொன்னாள் தாயார்.

வாசுதேவன் மனவேதனையுடன் மாடிக்கு எழுந்து சென்றான். தினந்தோறும் வீட்டிலே இந்தக் காட்சிதான். அற்பக் காரியங்களில் கூட மனத்தாங்கல். அந்த நாட்களில்-வாசுவின் விவாகம் நடந்த புதிதில்—அவர்களிருவரும் தாயும் மகளும்போல எவ்வளவோ பிரியமாயிருந்தார்கள். வரவர அவர்கள் உறவில் நெருக்கடிப் பட்டுப் போய் விட்டது. மருமகள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் மாமி குற்றம் கண்டாள். சம்பந்தி வீட்டார் சீர் சரியாகச் செய்யவில்லை, நகை அதிகம் போடவில்லை, தக்கபடி வரிசைகளில்லை என்று அக்கம் பக்கமெல்லாம் குறை கூறி வந்தாள். மீனா மனதிலேயே துயரத்தை அடக்கி வைத்து நொந்து மெலிவுற்றாள். அநேக இரவுகளிலே விசித்து விசித்து அழுது கண்ணீர் உகுப்பாள். வாசுதேவனுக்கு இதெல்லாம் எரிச்சலாயிருந்தது. வீடே கலை யிழந்தது. அநேக சமயங்

களில் தாய், மனைவி இருவரிடமும் பேசாமலும் சாப்பிடாமலும் இருந்து விடுவான். அப்பேர்ப்பட்ட தினங்களில் வீட்டில் மூவரும் பட்டினி.

இப்பொழுது மீனு ஏழு மாதக் கர்ப்பிணி. அவளுக்கு 'வளைகாப்பு' அடுக்கி, சீமந்தம் நிகழ்த்தி அதன் பின் தன் வீட்டுக்கு அழைத்துப் போகத் தீர்மானித்திருந்தார் அவளது தந்தை. ஆனால் திடீரென்று அவருடைய சகோதரர் ஒருவர் இறந்து போனதால் மேற்படி விசேஷம் நடத்த அவரால் முடியவில்லை. இது விவரத்தைத் தெரியப்படுத்தி, தாம் இருக்கும் இடத்தில் லேடி டாக்டர், பிரசவ ஆஸ்பத்திரி முதலிய வசதிகள் இருப்பதால் மீனுவை அனுப்பிவைக்க வேண்டுமென்றும், அவளை அழைக்க அவளது தாயாரை அனுப்புவதாகவும் வாசுதேவனுக்கு அவன் மாமனார் எழுதியிருந்தார்.

* * *

எதிர்பார்த்தபடி மீனுவின் தாயார் அன்று மாலை ரயிலில் வந்து சேர்ந்தாள். சம்பந்தியம்மாளை "வாருங்கள்" என்று கூட வரவேற்கவில்லை வாசுதேவனின் தாயார்.

வாசு வந்ததும் தாயார் கொண்டு வந்திருந்த பழங்களையும் பட்சணங்களையும் ஒரு தட்டில் எடுத்துக்கொண்டு போய் அவன் முன் வைத்துவிட்டு, "அத்தை ரொம்ப கோபமாயிருக்கிறார்கள். அம்மாவைப் பார்த்ததும் 'வா!' என்றுகூடச் சொல்லவில்லை. இதுவரை ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. நான் ஒருத்தி உயிரோடு இருப்பதே பிடிக்கவில்லை போலிருக்கிறது!" என்று சொல்லித் தேம்பித் தேம்பி அழுதாள் மீனு.

வாசுதேவனின் மனம்! கொதித்தது. தன்னுடைய தாயார் இப்படி இருந்து விட்டாளே என்று நினைக்க நினைக்க அவனுக்கு அவமானமாகவும் ஆத்திரமாகவுமிருந்தது.

இரண்டு தினங்கள் எப்படியோ கழிந்தன.

மூன்றாம் நாள் மீனுவும் அவள் தாயாரும் ஊருக்குப் புறப்பட்டனர். கையில் கூஜாவுடன் வாசுவின் அறைக்குள் நுழைந்தாள் மீனு. அவன் ஏதோ கதைப் புத்தகத்தில் ஆழ்ந்திருந்தான்.

"போய் வரட்டுமா?" என்று சொல்ல வாயெடுத்தாள் மீனு. பேச முடியவில்லை. தொண்டை கம்மியது. பொல பொலவென்று கண்ணீர் பெருகி உதிர்ந்தது. வாசு ஒரு தரம் தலையை உயர்த்தி அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மறுபடியும் புத்தகத்தில் ஆழ்ந்தான். அந்தப் பார்வை அவளுக்கு மேலும் சஞ்சலத்தையே கொடுத்தது.

"அம்மா, புறப்படுங்கள்!" என்று அவசரப்படுத்தினான் வண்டிக்காரன். கலங்கிய கண்களுடனும் பரிதவிக்கும் மனதுடனும் வண்டியில் ஏறிக் கொண்டாள் மீனு. "போய் வருகிறோம்" என்று மாமியார் எங்கேயோ பார்த்துச் சொல்வது வாசுதேவனுக்கு ஜன்னல் வழியாய்த் தெரிந்தது. வண்டி நகர்ந்து கடகட வென்று ஓடி மறைந்தது.

ரயிலில், பெண்கள் வண்டியில் இருவரும் ஏறிக்கொண்டனர். வண்டி புறப்பட இரண்டாவது தடவையாக ஊதியாகிவிட்டது. மீனு ஜன்னல் வெளியே பறக்கப் பறக்க எதையோ பறி கொடுத்தவள் போல் பார்த்து விழித்துக்கொண் டிருந்தாள். தான் ஓர் அனாதை; கதியற்றவள் என்ற எண்ணம்



அவன் இதய அடிவாரத்திலிருந்து பொங்கி எழுந்தது. இதுவரை அடக்கி வைத்திருந்த துக்கத்தையெல்லாம் கொட்டி, "அம்மா!" என்று கதறிக் கொண்டே தாயின் மடியில் விழுந்து விசும்பினான்.

* * *

மீனு புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் தன் தாயார் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு எங்கோ புறப்படுவதைக் கண்ட வாசு திடுக்கிட்டான்.

"அம்மா, எங்கே புறப்படுகிறாய்?......நீ செய்வது ஒன்றுமே எனக்கு நன்றாயில்லை. ஏன் இம்மாதிரி சதா கோபாவேசமாயிருக்கிறாய்?" என்று கேட்டான் வாசு.

இந்தக் கேள்வி அவளுக்குப் பெரிதும் ஆத்திரத்தை மூட்டியது.

"பிடிக்காது!—உனக்கும் பிடிக்காது, உன் மனைவிக்கும் பிடிக்காது!—நான் போகிறேன். நான் இருக்கிறேன் என்று தானே அவளை ஊருக்கு அனுப்பி விட்டாய்?" என்று கண்ணீருடன் பேசினாள்.



"கடவுள்மீது ஆணையாக நீ எங்கும் போகக் கூடாது!" என்று சொல்லிவிட்டு ஆபீசுக்குப் போனான் வாசு.

அன்று மாலை வீடு திரும்பியதும், தாயார் ஸ்ரீரங்கத்துக்குப் போய்விட்டதாகவும் வீட்டுச் சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்திருப்பதாகவும் அறிந்தான் வாசு.

"நாம் குடித்தனம் செய்யும் அழகே அழகு!" என்று தனக்குத்தானே சொல்லிச் சிரித்துக் கொண்டான்.

நாட்கள் செல்லச் செல்ல விடுதிச் சாப்பாடும் நண்பர்கள் கூட்டமும் அவனுக்குப் பிடிக்காமற் போய் விட்டன. தாயாரின் நினைவு வரும்போது மனம் பொங்கி அழுது விடுவான். "நம்மால்தானே அம்மா இப்படி அனாதைபோல் போய் விட்டாள்? சித்தி வீட்டிலே எத்தனை நாள் அவள் இருக்க முடியும்? தன்னைப் பாராமல் எப்படி மன நிம்மதியாயிருப்பாள்?—மீனுவுக்கு ஒரு குறைவுமில்லை. தகப்பனார் வீட்டிலே சகல சௌகரியங்களுடன் இருப்பாள்! எவ்வளவு கர்வம் அந்தக் கழுதைக்கு? ஒரு வரிகூட எழுதாமலிருந்து விட்டாளே? ஐயோ, அம்மா! நீ எங்கே நின்று தவிக்கிறாயோ?" என்றெல்லாம் வெறி பிடித்தவன் போல் கதறியழுதுகொண்டே எழுந்தான் வாசு. "எனக்கு அசௌக்கியம்—உடனே வந்து சேரவும்" என்று ஸ்ரீரங்கத்திலிருக்கும் தாயாருக்கு ஒரு தந்தி கொடுத்துவிடுவோம் என்ற தீர்மானத்துடன் நேரே தபாலாபீசுக்குப் புறப்பட்டான்.

* * *

"தொலைந்து போகிறேன்!" என்று சபதமிட்டு வெறுப்புடன் சென்ற வாசுவின் தாயார் அப்படியொன்றும் இந்த உலகை விட்டுத் தொலைந்துபோகவில்லை. ஸ்ரீரங்கத்திலே அவள் தன் சகோதரியின் வீட்டில் தான் தங்கியிருந்தாள். அந்த வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு உபாத்தியாயரும் அவருடைய மனைவியும் குடியிருந்தனர். உபாத்தியாயரின் மனைவி நிறைமாதக் கர்ப்பிணி. வீட்டிலே உதவிக்கு யாருமில்லை. தள்ளாடிக் கொண்டு அவளே வீட்டு வேலைகளையெல்லாம் கவனித்துக் கொள்வாள். சில வேளைகளில் அவளுக்கு அயர்ச்சி வந்து விடும். அந்தச் சமயங்களில் 'அத்தை', 'அத்தை' என்று ஈனமான குரலில் வாசுவின் சித்தியை அழைப்பாள். அவள் உடனே எழுந்து சென்று அந்தப் 'பிள்ளைத் தாச்சி'க்கு வேண்டிய உதவிகள் செய்வாள்.

இந்தக் காட்சியைக் காணும்பொழுதெல்லாம் வாசுவின் தாயாருக்கு மனம் கலங்கும். பார்க்கப்போனால் எதிர் வீட்டுப் பெண் தன் சகோதரிக்குப் பந்துக்கள்கூட இல்லை. பழகிய காரணம்தான். ஆனாலும் எவ்வளவு வாஞ்சை!

நடந்தவற்றை நினைக்க நினைக்க அவளுடைய துயரம் அதிகரித்தது. "சீ, எவ்வளவு கேவலமாக நடந்து கொண்டோம்? நம் பிள்ளையையும் பெண்ணையும் வெறுத்து வந்து இப்படி இன்னும் உயிரோடு இருக்கிறோமே! அங்கே மீனா என்ன பாடு படுகிறாளோ?" என்று எண்ணிக்கொண்டே, இரவெல்லாம் தூக்கமின்றித் தவித்தாள். இப்படிப் பல நாட்கள் கழிந்தன.

* * *

தபாலாபீஸின் அருகே வந்த வாசுதேவனிடம் தந்திச் சேவகன் ஒரு தந்தியைக் கொடுத்துக் கையெழுத்து வாங்கிக் கொண்டு சென்றான்.

அந்தத் தந்தியாவது:—

"மீனாள் பிரசவம்—அபாய நிலைமை—உடனே வரவும்."

வாசு பரபரப்புடன் ரயில்வே ஸ்டேஷனையடைந்தான். நல்ல வேளையாக உடனே ரயிலும் கிடைத்தது.

அலைகடல் துரும்புபோல் தத்தளிக்கும் வாசுவின் உள்ளத்திலே, எண்ணற்ற துயர நினைவுகளுக்கிடையே மீனாவின் உருவம் கனவுபோல எழுந்தது. "நீ பாவி! கடமையில் தவறியவன்! கட்டிய மனைவியை நட்டாற்றில் விட்ட பாதகன்!" என்று அவன் மனது பழித்துக்கொண்டேயிருந்தது.


மாமனார் வீடு நெருங்கும்போது வாசுவின் கால்கள் பின்னின. மீனாவை உயிரோடு பார்க்கப் போகிறோமா என்ற ஏக்கம் எழுந்து அவன் மனதைக் கலக்கிக்கொண்டிருந்தது.

வீட்டு நடை ஏறும்போது, 'குவா, குவா' யென்ற பச்சிளங் குழந்தையின் மெல்லிய குரலும், "ஐயா, அழாதே!" "என் கண்ணே, வேண்டாம்மா!"—"என் ராஜா துரை ஏன் அழணும்?" என்ற கனிந்த குரலும் சேர்ந்து வந்து கொண்டிருந்தன. ஆம், அந்தப் பெரிய குரல் தன் தாயாரின் குரல்தான்! வாசு ஆச்சரியத்துடன் உள்ளே சென்றான்.

மிகவும் கஷ்டப்பட்டபோதிலும் தெய்வச் செயலால் மீனா சௌகரியமாக ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். பிரசவத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பே மீனாவின் மாமியார் வந்திருந்து மருமகளுக்கு வேண்டிய உதவிகள் செய்து கொண்டு, அல்லும் பகலும் அவள் அருகிலேயே இருந்தாள்.

"அம்மா! நீ எப்போது வந்தாய்?" என்று மகிழ்ச்சியுடன் கேட்டான் வாசு. அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் "பார்த்தாயாடா, கண்ணு! உன் அப்பனுக்கு உன்னை எடுத்துக் கொள்ளக்கூடத் தெரியவில்லையே! சிரியடா, கண்ணு!" என்று கொஞ்சிக்கொண்டு குழந்தையை வாசுவின் மடிமீது வைத்து மிக்க ஆனந்தத்துடன் குழந்தையின் கன்னங்களில் மாறி மாறி முத்தங்களை வருவித்தாள்.

அந்தச் சின்னஞ் சிறிய பாப்பா, தன் பொக்கை வாயை அகல விரித்துக்கொண்டும், அழகிய கரங்களை நெளித்துக்கொண்டும், 'இங்கா' 'இங்கா' என்று ஏதேதோ பேசியது. அந்த இன்பக் காட்சியைக் கண்ட மீனாவும் வாசுவும் ஆனந்தத்தால் பூரித்துப் போனார்கள்.



நல்ல யோசனை!

○ ● ○

"டாக்டர் ஐயா! அந்த 'தர்மா மீட்டர்' எங்கே வாங்கலாம்? அது என்ன விலைக்கு ஆகும்?"

"ஏன், உன் மனைவிக்கு அடிக்கடி ஜுரம் வருகிறதா?"

"இல்லைங்க! அதை வாயில் வைத்தவுடன் அவள் பேசாமல் இருந்து விட்டாளே! அந்தமாதிரி ஒன்று என் கையில் இருந்தா எனக்கு ரொம்ப சௌகரியமா யிருக்கும்."

குறைந்த விலை-
உயர்ந்த ரகம்

ஸ்டேன்ஸ்
வறுத்த
காப்பிக் கொட்டை
தாங்களே பொடி
செய்ய விரும்பு
வர்களுக்குப்
பொறுக்கி வறுத்த
கொட்டையும்
கிடைக்கும்.

ஏஜண்டுகளுக்கு
ஏராளமாய்
அனுப்புகிறோம்.



குறைந்த விலையில் உயர்ந்த காப்பி வேண்டுமா? ஸ்டேன்ஸ் ரெட் என்சைன் காப்பி கிடைக்குமே.

பொறுக்கி வறுத்துப் பொடி செய்வதால் கிடைக்கும் முழு மணமும் ருசியும் ஸ்டேன்ஸ் சிவப்பு லேபிள் காப்பியில் உண்டு. காற்றுப் புகாத டப்பாக்களில் புத்தப் புது மணத்தோடு எப்போதும் கிடைக்கும்.

Stanes சிவப்பு லேபிள் கலப்பற்ற **காப்பித்தூளும் காப்பிக் கொட்டையும்**

3, 7, 14, 20 பவுண்டு டின்களில் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட், கோயமுத்தூர், தென் இந்தியா

சென்னை மாகாணத்திலுள்ள இடங்களுக்கு மாத்திரம் ஸ்பெஷல் இலவச டெலிவரி விலைகள் :

பாசஞ்சர் டிரெயின் மூலம்: 10 பவுண்டு பை பினாண்டேஷன் பீபரி வறுக்காத கொட்டை ... ரூ. 13-12-0

10 பவுண்டு பை பினாண்டேஷன் O/A தட்டைக் கொட்டை ... ரூ. 12-8-0

குட்ஸ் டிரெயின் மூலம் : 28 பவுண்டு பை பினாண்டேஷன் பீபரி வறுக்காத கொட்டை ... ரூ. 36-12-0

28 பவுண்டு பை பினாண்டேஷன் O/A தட்டைக் கொட்டை ... ரூ. 33-4-0

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி லிமிடெட்., டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட்., மானேஜிங் ஏஜண்டுகள், கோயமுத்தூர் என்ற விலாசத்திற்கு பூரா தொகையையும் மணியார்டர் மூலம் அனுப்புதல் வேண்டும்.


சுவை தருகிறது
சுலபமாய் ஜீரணமாகிறது
சுத்தமானது
விடமின் அடங்கியது
DALDA
VANASPATI
ருசியுள்ள கொழும்புகள் உங்களுக்கு ஊக்கத்தையளிக்கவேண்டுமானால் மசாலா மட்டும் சேர்ந்தால் போதாது—அவைகளில் டால்டா சேரவேண்டும்!
உங்கள் உணவை விடமின் அடங்கிய டால்டாவில் சமைப்பது மிகவும் அறிவுவாய்ந்த செய்கையாகும். இந்த. எளிதில் ஜீரணமாகின்ற சமையலுக்குதவும் வஸ்து விசேஷ சுவையளித்து சாதாரண தின்பண்டங்களை செழிப்புடையதாகச் செய்வதுமல்லாமல் அவைகளின் சத்தை எடுத்துக் காட்ட ஒவ்வொரு ஸ்திரீக்கும் உதவு புரிகின்றது! சுத்தமான டால்டா உங்கள் தினந்தோறுமுள்ள சாப்பாட்டை அதன் சத்தை யளிக்கும் திறமையைக்கொண்டு சீர்படுத்துகிறது ... உங்கள் குடும்பத்தினருக்கு அதிகப்படியான ஊக்கத்தையும் கொடுக்கின்றது.
✱ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம் செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. C461 P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திற்கு நான்கு அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.
HVM. 50-23 TM
THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.



வெண்ணிலவிலே

எஸ். வி. எஸ்.

நீலவானில் நக்ஷத்திரக் கூட்டங்கள் 'மினுக், மினுக்' கென்று மின்னிக்கொண்டிருந்தன. பூரண சந்திரன் உல்லாசமாக பவனி வந்துகொண்டிருந்தான். தென்றல் காற்று மெல்லத் தவழ்ந்து வந்து வீசிற்று. ராஜகுமாரி லீலாவதி தேவி அரண்மனையின் நிலா முற்றத்தில் ஒரு ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் படுத்த வண்ணம் இயற்கையழகில் ஈடுபட்டிருந்தாள்.

அவள் எண்ணினாள்: இந்தக் கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டி மின்னும் நக்ஷத்திரங்களைப் பற்றித்தான் முதல் நாள் நமசிவாய சுவாமிகள் ஒரு கதை சொன்னார்.

அந்தக் கதை என்ன தெரியுமா? ஒரு ஊரில் ஒரு பையன் இருந்தான். அவன் ஒரு நாள் தன் அப்பாவைப் பார்த்து, "அப்பா, இந்த நக்ஷத்திரங்கள் மின்மினிப் பூச்சிகள் மாதிரி மின்னுவதைப் பார்த்தாயா?" என்றான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த மின்மினிப் பூச்சி ரொம்பவும் பெருமையடைந்தது. ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் அதற்கு வருத்தமாகப் போய்விட்டது. அந்த வருத்தத்தின் காரணமாக, "நக்ஷத்திர தேவா! நீங்கள் எங்களைவிட எத்தனையோ மடங்கு பெரியவர்கள். ஆயிரம் ஆயிரம்—இல்லை, கோடி கோடி மடங்கு பெரியவர்கள்—உருவத்திலும் சரி, ஒளியிலும் சரி! அப்படியிருந்தும் அற்பப் புழுவாகிய எங்களைப் போல் ஏன் மின்னுகிறீர்கள்?" என்று மின்மினிப் பூச்சி கேட்டது.

இதைக் கேட்ட நக்ஷத்திர தேவன், "ஏன், நாங்களும் உன்னைப்போல் மின்னுவதால் உனக்கு அவமானமாக இருக்கிறதா, என்ன?" என்று கேட்டான்.

மின்மினிப் பூச்சி, "அடாடா! அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை! எங்களைப் போன்ற அற்பர்களை உங்களைப் போன்ற பெரியவர்களுடன் சம்பந்தப்படுத்தி உலகோர் பேசுவதால், எங்களுக்கு எவ்வளவோ பெருமையாகத்தான் இருக்கிறது. ஆனால் அதுவே உங்களுக்கு வெட்கமும் அவமானமும் அளிக்கக்கூடிய விஷயமாக இருக்குமோ என்று எனக்கு வருத்தமாயிருக்கிறது!" என்றது.

இதைக் கேட்டதும், நக்ஷத்திர தேவனின் உள்ளம் நெகிழ்ந்து விட்டது. "என் அருமை மின்மினிப் பூச்சி! உண்மையான பெரியவர்களுக்குச் சாமான்யமானவர்களுடன் கலந்து வாழ்வதில்தான் சந்தோஷமும் ஆனந்தமும் இருக்க முடியும். அந்த முயற்சியில் நாங்களும் ஏதோ சற்று ஈடு

பட்டோம். நீ சொல்வதைப் பார்த்தால் நாங்கள் வெற்றி பெற்று விட்டோம் போல் தோன்றுகிறதே!" என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டான் க்ஷத்திர தேவன்.

இந்தக் கதையை நமசிவாய சுவாமிகள் அன்று சொல்லிவிட்டு, "லீலாவதி, கதையின் தாத்பரியம் புரிந்ததோ?" என்று கேட்டார்.

"சுவாமி! தாங்கள் பெரிய மகான்; தத்துவார்த்தங்களில் மூழ்கித் தத்வ முடிச்சுகளை அவிழ்க்கும் எத்தனையோ கதைகளைத் தங்களால் சொல்ல முடியும். அப்படியிருந்தும், ஒரு சிறு பெண்ணாகிய எனக்கும் ஏற்றவாறு தாங்கள் கதைகளைப் புனைந்து உண்மைகளை விளக்கும்போது, க்ஷத்திர தேவன் சொன்ன உண்மை எனக்குப் புரியாமலா போய்விடும்!" என்றேன்.

"என்னையே உதாரணமாக நீ எடுத்துக் கொண்டு விட்டாயா? பொல்லாதவள் அம்மா, நீ!" என்று சொல்லி, என்னை அன்று அவர் ரொம்பவும் பாராட்டி விட்டார்.

அன்றைய தினத்திலிருந்து ஒவ்வொரு நாளும்தான் சுவாமிகள் என்னை வெகுவாகப் பாராட்டுகிறார். அப்படிப்பட்ட சுவாமிகளின் பாராட்டைப் பெறுவதைக் காட்டிலும் ஒருத்திக்கு வேறு என்ன வேண்டும்! — என்று எண்ணிக்கொண் டிருந்தவள் அப்படியே தூங்கிப் போய்விட்டாள்.

2

கீழ்வானில் சூரியன் தன் செம்பொன் கிரணங்களை வீசிக்கொண்டு உள்ளத்தைக் கவரும் செம்மேனியோடு எழுந்தான். பட்சிஜாலங்கள் தத்தம் கோலாகல த்வனிகளை எழுப்பிச் சூரியனை வரவேற்றன. காவேரி யம்மனும் கலகல நாதம் புரிந்து கதிரவனை வரவேற்றாள். ஹம்ஸதூளிகா மஞ்சத்தை விட்டு எழுந்து ராஜகுமாரி லீலாவதி தேவியும் கதிரவனைக் கைகூப்பி வந்தித்தாள்.

இப்படி விசேஷமாக ஆரம்பித்த அன்றையப் பொழுது முழுதும் விசேஷமாகத்தான் இருந்தது.

பொழுது விடிந்து மூன்று நாழிகைக்குள் வரும் நமசிவாய சுவாமிகள் அன்று வெகு நேரமாகியும் வரவில்லை. அவருடைய வருகைக்காகக் காத்துக் காத்து லீலாவதி தேவிக்குப் போதும் போதும் என்றாகி விட்டது. இப்படி அமைதியை இழந்து கொண்டிருந்த லீலாவதி தேவிக்குத் திடீரென்று யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. சுவாமிகள்தான் வருகிறார், அவரைக் கோபித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணித் திரும்பியவள் திடுக்கிட்டாள். நீண்டு வளர்ந்த லாவண்யமான தாடியுடன் தோன்றும் சுவாமிகளுக்குப் பதில் தாடியில்லாத காஷாயம் தரித்த நவ யௌவன வாலிபச் சந்நியாசி தோன்றினால் அவள் திடுக்கிடாமல் என்ன செய்வாள்?

"நீங்கள் யார்? எங்கே வந்தீர்கள்?"

"தேவி, இன்று சுவாமிகளுக்கு உடல் நிலை சரியாக இல்லை. நடக்கக்கூட இயலாமல் அசதியுடன் இருக்கிறார். ஆகவே, என்னிடம் ஒரு கதையைச் சொல்லித் தேவியாரிடம் போய் இந்தக் கதையைச் சொல்லி விட்டு வா என்றார். ஆனால், நீங்கள் கதை கேட்கும் மனோ நிலையில் இல்லைபோல் தோன்றுகிறதே! நான் வருகிறேன்!" என்று சொல்லி விட்டுத் திரும்பினார்.

"சுவாமிகள் தங்களிடம் கதை சொல்லியனுப்பினாரா? அப்படியானால் தாங்கள் கதையைச் சொல்லிவிட்டுப் போங்கள்!"

"தங்களுடைய மனோ நிலை மாறிவிட்டது. ஆனால் என் மனோ நிலை இப்போது கதை சொல்லும் நிலையில் இல்லை!"

"நான் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னித்து விடுங்கள்!"

இளஞ் சந்நியாசி ஒரு கணம் யோசித்தார். பின்னர், "சரி! இவ்வளவு வற்புறுத்துவது ஒரு ராஜகுமாரியாக இருக்கும் போது எப்படி நான் மறுப்பது? சொல்லுகிறேன், கேளுங்கள்" என்று ஆரம்பித்தார்.

"பூங்குளம் பூங்குளம் என்று ஓர் ஊர். அந்த ஊரில் ஒரு பெண் பிறந்தாள். ஆகா! அவள் எவ்வளவு அழகாக இருந்தாள், தெரியுமா? — தங்களைப்போல் — இல்லை, இல்லை; — அவள் ரொம்பவும் அழகாக இருந்தாள். அவள் பெயர் குமுதம்.

"வயது அதிகரிக்க அதிகரிக்க அவளுக்கு வெட்கமும் அதிகரித்து வந்தது. இதனால் அவள் தன் அவயவங்களை யெல்லாம் குவித்துத் தலையைச் சற்றுக் கவிழ்த்து உடலைக் கோணிக்கொண்டு நின்றாள்! இல்லை; தவஞ் செய்தாள். தமக்கேற்ற காதலனும் இந்த உலகிலிருப்பானா—அல்லது கன்னிகையாக இருந்தே காலத்தைக் கழித்து

விட வேண்டியதுதானா என்ற கவலை அவளுக்கு!

"அவள் நலமும் ஈடேறாமல் போகவில்லை. ஒரு நாள் கீழ்த்திசையில் கதிரவன் என்றொரு காதலன் வந்தான். அவன் தன் செங்கிரணங்களாகிய செங்கரம் கொண்டு அவளைத் தழுவிக் கொண்டான். அவனுடைய அழகிலும், அவனுடைய காதல் பிணைப்பிலும் கட்டுண்ட குமுதம் தன் முகை விரித்து முகமலர்ந்தாள். அப்போது அவள் ஆயிர மடங்கு அழகாகத் தோன்றினாள்.

"கதிரவனும் குமுதமும் பகல் எல்லாம் கொஞ்சிக் குலாவினார்கள். இரவு வந்தது. கதிரவன் ஓடி ஒளிந்தான். குமுதம் தன் அங்கமெல்லாம் குவித்துப் பழையபடி நாணிக் கோணி நின்று விட்டாள் பூங்குளத்தில்!

"குமுதத்தால் அவன் பிரிவைத் தாங்க முடியவில்லை! அவள் தன் அருமைக் காதலன் எப்போது வருவான், எப்போது வருவான் என்று ஏங்கிக் கொண்டிருப்பாள். பொழுது புலரும்; கவலை தீரும்.

"இப்படியே பல நாட்கள் செல்வதுண்டு. ஒவ்வொரு சமயம் கதிரவன் வர நேரமாவதைக் கண்டு என்னவெல்லாமோ நினைத்து விடுவாள் குமுதம்.

"அவனுடைய தேர்ப் புரவிகள் கடிவாளக் கயிறுகளை உருவிக்கொண்டு ஓடி விட்டனவோ? அல்லது ரதத்தின் அச்சு மரம் இற்றுப் போய் விட்டதோ? இல்லை, வழி தவறித்தான் போய்விட்டாரோ? — இப்படிப் பலவிதமாக எண்ணும்போது அவள் கண்களில் கண்ணீர் துளித்து விடும்!

"இதைப் பார்க்கும் கதிரவனுக்கு மனம் இளகிவிடும். தன் செங்கிரணக் கரங்களைக் கொண்டு அவள் கண்ணீரைத் துடைத்துத் தேற்றுவான்!

"இப்படி ஒரு நாள் இரண்டு நாள் அல்ல. பல நாட்கள் நடந்தன. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்பார்கள். அதே போல் கதிரவனுக்கும் அடிக்கடி கோபம் வருமாம் குமுதத்தின்மீது!" என்று சொல்லி இளஞ் சந்நியாசி கதையை நிறுத்தினார்.

இமை கொட்டாமல் கேட்டுக் கொண்டிருந்த ராஜகுமாரிக்குக் கதையை இவ்விடத்தில் நிறுத்தியது மிகவும் வேதனையளித்தது. "என்ன சுவாமி, ஏன் நிறுத்தி விட்டீர்கள்?" என்று கேட்டாள்.

"எங்கள் குருநாதர் சொன்ன கதை அவ்வளவுதான்!" என்றார் இளஞ் சந்நியாசி.

"இருக்காதே, அவர் நல்ல முடிவுள்ள கதையாகத்தானே சொல்லுவார்? இந்தக் கதை முடியவில்லையே!"

"தேவி, எங்கள் குருநாதர் தங்கள் புத்திசாலித்தனத்தை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்! இன்றுதான் அது எவ்வளவு உண்மை என்பது தெரிந்தது! இந்தக் கதையின் முடிவு என்னவென்று நாளை சுவாமிகளையே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்று சொல்லிவிட்டு, இளஞ் சந்நியாசி போயே போய்விட்டார்.

3

நமசிவாய சுவாமிகளின் சிஷ்யர் வந்து விட்டுப் போனதிலிருந்து கதிரவனும், குமுதமுமே லீலாவதியின் உள்ளத்தில் மாறி மாறி வந்து கொண்டிருந்தனர். "கதிரவனுடைய கோபத்துக்கு உள்ளாகிய குமுதம் என்ன கஷ்டங்கள் அனுபவித்தாளோ, பாவம்! ஆடவர்களே இப்படித்தானா? அவர்கள் பெண்களின் இதயத்தை அறியமாட்டார்களா! என்ன அநியாயம்!" என்று பல பல எண்ணங்கள் அவள் உள்ளத்தில் எழுந்தன.

மறு நாள் பொழுது விடிந்தது. நமசிவாய சுவாமிகள் வந்தாரோ இல்லையோ, அவள் தன் உள்ளத்தில் எழுந்த கேள்விகள்,



"இது தேக்கமரத்திலே செய்த மேஜை தான்னு எனக்கு எப்படித் தெரிவது? ஏதாவது சாட்சி உண்டா?"

"பார்த்தா தேக்க மரத்திலே செஞ்ச மாதிரியே இல்லீங்களா? அதுதான் சாட்சி!"

சந்தேகங்கள் எல்லாவற்றையும் கொட்டி விட்டாள்.

"கதிரவனாவது, குமுதமாவது! நான் அப்படியொன்றும் கதை சொல்லி யனுப்ப வில்லையே?" என்றார் நமசிவாய சுவாமிகள்.

"இதென்ன, சுவாமி! அவர் தாங்கள் இன்று வந்து மீதிக் கதையைச் சொல்லு வீர்கள் என்றாரே!"

"நானா? எனக்கு அந்தக் கதையே தெரியாதே!"

"கதையே தெரியாதா! நீங்கள் சொல்லி யனுப்பியதாகத்தானே அவர் சொன்னார்?"

"நான் அவனிடம் ஒரு கதையையும் சொல்லியனுப்ப வில்லையே! நான் வர இயல வில்லை என்றுதானே சொல்லச் சொன்னேன்! இருந்தாலும் அவன் ஏதோ ஒரு கதை உனக்கு அரை குறையாகச் சொல்லி யிருக்கிறான். அவனையே வந்து பூர்த்தி செய்யச் சொல்லுகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் போனார் சுவாமிகள்.

லீலாவதி தேவிக்கு அந்த சிஷ்யச் சுவாமிகள் மீது கோபம் கோபமாக வந்தது. "சுவாமிகள் சொன்னதாகச் சொல்லி, நம்மை அந்தப் பைத்தியக்காரக் காதல் கதையில் பைத்தியமாக்கி விட்டாரே! ஒரு ராஜ குமாரியிடம் வந்து இப்படிப் பேசுவதற்கு அவருக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும்! அவரை லேசில் விடக் கூடாது!" என்று தீர்மானித்தாள்.

இந்தச் சமயத்தில் முகத்தில் புன்முறுவலுடன் சிஷ்யர் வந்தார். அந்த முறுவல் லீலாவதி தேவிக்கு மிக்க எரிச்சலை உண்டாக்கியது.

சிஷ்யர் அதைப் பொருட்படுத்தாமல், "நீங்கள் எழுப்பிய கேள்விகளுக்குத் தக்க விடைகளை என்னிடம் சுவாமிகள் சொல்லி யனுப்பியிருக்கிறார்!" என்றதும், லீலாவதி திடுக்கிட்டாள்.

"சுவாமிகள் சொல்லி யனுப்பினாரா? இதில் ஏதோ விஷயமிருக்கிறது!" என்று எண்ணித் தன் தோழிக்குச் சமிக்ஞை செய்தாள். அவ்வளவுதான்; முன் கூட்டியே ஏற்பாடு செய்திருந்தபடி, நான்கு காவலாளிகள் திமுமென்று பிரவேசித்து சிஷ்யரின் மேலிருந்த போர்வையை எடுத்து எறிந்துவிட்டு, அவருடைய கைகளுக்கு விலங்கிட்டனர்.

அந்தப் பொல்லாத சிஷ்யர் மறுபடியும் லீலாவதியைப் பார்த்து ஒரு புன் முறுவல் செய்து விட்டு, காவலர்களுடன் சென்றார்.

அப்போது அவருடைய முதுகைப் பார்த்த லீலாவதி திடுக்கிட்டாள். காரணம், அந்த முதுகிலிருந்த ஒரு வடு தான்! உடனே, அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு, "என்ன பைத்தியக்காரத் தனம்!" என்று வருந்தினாள்.

* *

இந்நிலையில், பாண்டி மன்னனான வீரமாறன் தன் மந்திரியிடம் சொன்னான்:

"சோழ தேசத்தில் நமசிவாய சுவாமிகள் என்றொரு பெரியார் வந்திருக்கிறாராம். அவர் சிஷ்யத்திற்கு நித்யம் அருமையான கதைகள் புனைந்து சொல்லுகிறாராம். தூக்கத்தில் ஆழ்ந்தவனுக்கு ஏற்றபடி கதை சொல்கிறாராம். அவன் தன் தூக்கத்தைத் திரணமாக மதித்துச் சிரிக்க ஆரம்பிக்கிறானாம். அண்ணன் தம்பிகள் சண்டை போட்டுக் கொண்டால் அவர்களுக்கும் கதை சொல்கிறாராம். அற்ப விஷயத்துக்குச் சண்டை போட ஆரம்பித்தோமே என்று வெட்கி, அவர்கள் ஒன்று சேர்ந்து



விடுகிறார்களாம். இப்படிப்பட்ட மகானைச் சோழ தேசத்துக் குழந்தை முதல் தொண்டுக் கிழவர் வரையிலுள்ள எல்லாரும் தங்கள் தங்கள் இதயத்தில் வைத்துப் பூஜிக்கிறார்களாம். அத்தகைய மகானை நம் பாண்டி நாட்டுக்கு அழைத்து வர வேண்டும். மேலும், தம்பி வாணனை எண்ணி எண்ணி, 'அவன் என்றைக்கு வருவானோ!' என்று ஏக்கம் கொண்டுள்ள தாயின் துயரையும் அந்த மகான் தீர்க்கலாம். ஆகவே மந்திரி, தாங்கள் அந்த மகானை இங்கு அழைத்து வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

உடனே மந்திரி, "நமது தூதர் தனஞ்சயனை இன்றே அனுப்பி அந்த மகானை மிக்க மரியாதையுடன் அழைத்து வர ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லி விட்டுப் போனார்.

4

"உலகம் போற்றும் உத்தமர், நமசிவாய சுவாமிகளின் சிஷ்யர், அரண்மனையில் ஏதோ அக்கிரமம் செய்து விட்டாராம்! இன்று மன்னர் பெருமான் வளவனின் சபையில் விசாரணை நடக்கப் போகிறது!" என்று சொல்லிக்கொண்டே ஜனங்கள் திரள் திரளாக உறையூர் நீதி மன்றத்தில் கூடினர். விசாரணை தொடங்கியது.

அரியாசனத்தில் வீற்றிருந்த சோழ மன்னனான வளவன், "நீர் யார்?" என்று கேட்டான்.

"நான் நமசிவாய சுவாமிகளின் சிஷ்யன்!"

"சரி; யார் அங்கே? நமசிவாய சுவாமிகளை இங்கே அழைத்து வாருங்கள்!" என்று ஏவலாளிகள் இருந்த பக்கமாகத் திரும்பிக் கட்டளை யிட்டான் வளவன்.

"மகாராஜா! இதோ வந்து விட்டார், நமசிவாய சுவாமிகள்!" என்று சொல்லிக் கொண்டே சிஷ்யர் தம் முகவாய்க் கட்டையிலும் கன்னத்திலும் மடியிலிருந்து ஏதோ எடுத்து ஒட்டிக் கொண்டார். அடுத்த நிமிஷம் சிஷ்யராக இருந்தவர் குருவாகி விட்டார்!

மன்னனும் சபையோரும் ஒரே அதிசயத்தில் மூழ்கினர். வளவன், "சுவாமிகளே, இது என்ன வேஷம்? யாரை ஏமாற்ற இந்த வேஷம் எல்லாம் போட்டீர்கள்?" என்றான்.



"சோழ நாட்டுச் சக்கரவர்த்தி என்ற பெருமையில் நீங்கள் நிலை தவறிப் பேசுகிறீர்கள்! என்னுடைய வேஷம் யாரையும் ஏமாற்றுவதற்காக அல்ல. நான் சிறு பாலகனாக இருந்தபோதே இன்று சொல்வதுபோல் எதற்கெடுத்தாலும் கதை சொல்லி வந்தேன். அதனால் ஒருபுறம் எனக்கு அறிவாளி, புத்திசாலி என்ற பெயரும் புகழும் கிடைத்தது. இன்னொரு புறம் 'இது என்ன, எடுத்ததற்கெல்லாம் கதை! கிழவனைப்போல் கதையைச் சொல்லிக் கொண்டு வருவதைப் பார்க்கச் சகிக்கவில்லை!' என்ற வசவும் கிடைத்தது! அப்போதிலிருந்தே 'எனக்குச் சீக்கிரம் வயது ஆகாதா? கிழவனாக மாட்டோமா? எடுத்ததற்கெல்லாம் கதைகள் சொல்ல மாட்டோமா?' என்று தோன்றும். ஆனால் அவ்வளவு சீக்கிரத்தில் வயது ஆகிற வழியாய்க் காணோம். ஆகவே, ரொம்ப வயதானவனாகவும் கிழவனாகவும் தோற்றமளிக்கும் கோலமாகிய இந்தக் கிழத் துறவி

யின் கோலத்தைப் பூண்டு, என் ஊரையும் நாட்டையும் விட்டு இங்கு வந்து சேர்ந்தேன். என் தந்திரம் என்னுடைய கதைகளுக்குத் தக்க மதிப்பைச் சம்பாதித்துக் கொடுத்தது. என் வேஷமே என்னை உங்களுடன் உறவு கொள்ளச் செய்தது. அதனால் எனக்கு ராஜகுமாரிக்குக் கதை சொல்லும் பாக்கியமும் கிடைத்தது. ஆனால் இந்த வேஷம் என் உடலைத்தான் வயதானவனைப் போலவும் கிழவனாகவும் காட்டியதே தவிர, என் உள்ளத்தை மூப்படையச் செய்யவில்லை. நான் ராஜகுமாரிக்குக் கதை சொல்லும்போதெல்லாம் இந்த உண்மை என் உள்ளத்தை வாட்டி வதைத்தது. இந்த விஷயத்தை ராஜகுமாரிக்குப் புலப்படுத்த வேண்டும் என்று எண்ணியே நான் சிஷ்யக் கோலத்தில் வந்தேன். நான் எண்ணியபடி இரண்டு நாளிலேயே உண்மையை வெளிப்படுத்தி யிருப்பேன். ஆனால் அதற்குள் நான் கைது செய்யப்பட்டு விட்டேன். இதில் என் தவறு ஏதாகிலும் உண்டா சொல்லுங்கள், மகாராஜா!" என்றார் நமசிவாய சுவாமிகள்.

இதைக் கேட்ட வளவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு பக்கம் சுவாமிகளின் வேஷம் குற்றம் போலும் தோன்றியது; இன்னொரு பக்கம் குற்றம் இல்லை போலவும் தோன்றியது. ஆகவே எதற்கும் சிறையில் அடைத்து வைப்போம் என்று முடிவு செய்தான்.

*　　*　　*

சிஷ்யரைக் கைது செய்துகொண்டு போனபோது, லீலாவதி தேவி அவருடைய முதுகில் வடு இருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டாளல்லவா? அதற்குக் காரணம், நமசிவாய சுவாமிகளின் முதுகிலும் அதே மாதிரி ஒரு வடு இருந்ததுதான்! அவள் சந்தேகித்ததற்கு ஏற்றாற்போல், அடுத்த நாள் இருவரும் ஒருவரே என்று நீதி மன்றத்திலும் ருசுவாகிவிட்டது!

நீதியும் உண்மையும் தொனிக்கும் கதைகளைச் சொன்னவரும், உள்ளத்தை உருக்கும் காதல் கதை சொன்னவரும் ஒருவரே தானா! அப்படியானால் அவர் உண்மையிலேயே பெரிய அறிவாளிதான்!

அப்பா அவருக்கு என்ன தண்டனை விதிக்கப் போகிறாரோ? உலகம் ஓர் அறிஞரை இழக்கும் பழிக்கு நான் காரணமாவேன் போலிருக்கிறது! அப்பாவிடம் சொல்லி அவரை விடுதலை செய்வது முடியாத காரியம். அவர் என்னை மன்னிப்பாரா?

ஆனால், "சுவாமி, என்னை மன்னியுங்கள்!" என்று அவரை எப்படிக் கேட்பது? பேச்சை எப்படி ஆரம்பிப்பது?

ஆம், அந்தக் கதையில் கதிரவன் கோபங்கொண்டானே — அவனுக்குக் கோபம் ஏன் வந்தது? குமுதம் அவனை என்ன செய்தாள்? இதையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புபவள்போல் அவரிடம் பேச்சை ஆரம்பிக்கலாமல்லவா?

இவ்வாறு தீர்மானித்ததுதான் தாமதம்; அடுத்த நிமிஷமே — அந்த நள்ளிரவிலேயே — அவள் கைதி யிருந்த சிறைக் கூடத்தை நாடிப் போனாள்.

இருளில் ஏதோ உருவம் தெரியவே, "லீலாவதி தேவியா?" என்று கேட்டார் சுவாமிகள்.

"ஆமாம். சுவாமி! தங்கள் குருநாதர் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லச் சொன்னதாகச் சொன்னீர்களே......"

"இதோ சொல்லி விடுகிறேன், லீலாவதி! 'நாம் பிரிந்திருக்கும் நேரம் கொஞ்சந்தான்; இதை நீ பொருட்படுத்தாதே!' என்று கதிரவன் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் ஒவ்வொரு நாளும் அவன் வரும்போதெல்லாம் குமுதம் கண்ணீர் விட்ட வண்ணம் காத்திருப்பதைப் பார்த்த கதிரவனுக்கு இரக்கம் போய்க் கோபம் வந்து விட்டது! அந்தக் கோபத்தில் குமுதத்துக்குத் தெரியாமல் பூங்குளத்திலிருந்த நீர், ஆற்றிலிருந்த நீர், சமுத்திரத்தி லிருந்த நீர் எல்லாவற்றையும் ஆவியாக மாற்றிக் கார்மேகப் படலம் உண்டாக்கித் தன்னையே மறைத்துக் கொண்டான் கதிரவன்! பன்னிரண்டு மணி நேரம் கழித்து வர வேண்டிய சூரியன், பதின்மூன்று பதினாறு என்று பல மணி நேரமாகியும் வராததைக் கண்டு, சொல்லி முடியாத துயரத்தை அனுபவித்தாள் குமுதம்! இதுதான் கதிரவன் அவளுக்கு விதித்த தண்டனை! குமுதத்தின் துயரத்தைக் கண்ட கார் முகில், 'நம்மால் இந்தக் குமுதத்தின் துயரத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை" என்று திடீரென மழையாகப் பொழிந்து மறைந்து விட்டது. எதிர்பாராத விதமாக மேகம் தன்னைக் கைவிட்டு விடவே, கதிரவன் பாடு சொம்பலம் திண்டாட்டமாகப் போய் விட்டது. குமுதத்தின் எதிரில் கையும்

ளவுமாகப் பிடிபட்டு விட்டான்! குமுதம் அவனை ரொம்பவும் கோபித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அவள் கோபித்துக் கொள்ள வில்லை; முகத்தையும் சிணுங்கிக் கொள்ளவில்லை. முகமலர்ச்சியோடு அவனை வரவேற்றாள். கதிரவனுக்கு வெட்கமாகப் போய் விட்டது!" என்றார் சுவாமிகள்.

லீலாவதி தேவி அந்தக் காதலர்களின் உல்லாச வாழ்க்கையில் ஈடுபட்டுத் தன்னை மறந்திருந்தாள். திடீரென்று இரண்டு காவலாளிகள் வந்து, "தேவி! தாங்கள் இந்த நள்ளிரவில் கைதியுடன் பேசிக் கொண்டிருந்ததற்காகச் சிறைப் படுத்தப் பட்டிருக்கிறீர்கள்!" என்றார்கள்!

5

அடுத்த நாள் ராஜகுமாரி சிறைப் படுத்தப்பட்ட செய்தி உறையூர் முழுதும் பரவியது.

வளவனுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. தன் சொந்தப் புதல்வியானால் தான் என்ன? நீதி மன்றத்தில் விசாரிக்க வேண்டியதுதானே ராஜதர்மம்?

ஜனங்கள் 'ஜே ஜே' என்று கூடி விட்டனர். கைதிகள் இருவரையும் கொண்டு வந்து நிறுத்தி விட்டார்கள். வளவனும் வந்துவிட்டான். விசாரணை ஆரம்பிக்க வேண்டியதுதான்.

அப்போது ஒரு ஏவலாளன் வந்து, "பாண்டிய தேசத்திலிருந்து வீரமாறன் அனுப்பிய தூதரான தனஞ்சயர் வந்திருக்கிறார்!" என்றான்.

அவரை உள்ளே அழைத்து வரும்படி உத்தரவிட்டான் வளவன். தனஞ்சயர் உள்ளே நுழைந்தார். கையில் விலங்குடன் சமணிய சுவாமிகள் நிற்பதைக் கண்டதும் அவர் திடுக்கிட்டார்.

"ஆ! இதென்ன, இளவரசர் வாணன் இங்கே கைதியாக நிற்கிறாரே!" என்றார் தனஞ்சயர்.

"என்ன! பாண்டிய தேசத்து இளவரசர் வாணனா?" என்று எல்லாப் பக்கத்திலிருந்தும் ஆச்சரியத்துடன் எதிரொலி கிளம்பியது.

துக்கமே வடிவாக இருந்த வளவனுக்கு ஒரே ஆனந்தம் உண்டாகிவிட்டது.

இளவரசர் வாணனே தம் அரண்மனையில் இவ்வளவு திருவிளையாடல் புரிந்தார் என்பதை அறிந்தபோது, வளவனுக்குக் கண்களில் ஆனந்த பாஷ்பம் துளித்து விட்டது. அப்படியே அவரை மார்புறத் தழுவிக் கொண்டான்.

*   *   *


அடுத்த சில நாட்களுக்கெல்லாம் தேவி லீலாவதி வாணனின் தேவி லீலாவதியாகிவிட்டாள்.

அன்று பால்போல் நிலவு எரிந்துக் கொண்டிருந்தது. வான வெளியில் தாரா கணங்கள் தயங்கி நின்றன. அவற்றின் அழகில் தன் மனதைப் பறிகொடுத்து நின்றாள் லீலாவதி. அப்போது வாணன் அங்கே வந்து, "தேவி! என்ன யோசனை?" என்று கேட்டான்.

"கதிரவனைப் போல் முகத்தை மறைத்துக் கொண்ட உங்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்! ஆனால், நீங்கள் முகத்தை மறைத்துக் கொண்டாலும் அகத்தைக் காட்டி விட்டீர்கள். அதனால் உங்களுக்குத் தண்டனை வேண்டியதில்லை. அப்படியே கொடுப்பதாயிருந்தாலும் எங்களால் முடியுமா?"

"ஏன் முடியாது?"

"அப்பாவி குமுதத்தின் வழி வந்தவர்கள் தானே நாங்கள்!" என்றாள் லீலாவதி.



"என்ன ஸார் இது? குழந்தையை இடுப்பிலே தூக்கி வைத்துக் கொண்டு ஸ்நானம் பண்றேள்?"

"குழந்தை என்னை விட்டு அரை நிமிஷம்கூடப் பிரியமாட்டான் ஸார்; கீழே விட்டால் ஒரே மூச்சாய்க் கத்த ஆரம்பிச்சுடறான். ஆபீஸுக்குப் போகணுமே, என்ன பண்றது?"



மாப்பிள்ளை தேர்தல்

★

பி. வி. பலராமன்

★

ஒரே ஒரு ராஜ்யத்தை ஒரே ஒரு அரசன் அரசாண்டு வந்தான். அவனுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் லக்ஷ்மி.

ராஜகுமாரிக்கு லக்ஷ்மியைப் போல் செல்வமும், சரஸ்வதியைப் போல் கல்வியும், ரதியைப் போல் அழகும் ஒன்றாகப் பொருந்தியிருந்தன.

ராஜ குமாரிக்குக் கல்யாணம் செய்ய வேண்டிய வயது வந்தது. பக்கத்துத் தேச ராஜ குமாரர்கள், ராஜகுமாரி லக்ஷ்மியை மணக்க "நான், நீ!" என்று போட்டி போட்டுக் கொண்டு வந்தார்கள்.

ராஜகுமாரிக்கு ஒருவரையும் பிடிக்கவில்லை. அவள் ஓர் அரச குமாரனையும் தனக்குப் பிடிக்கவில்லை என்று சாக்குச் சொல்லி விட்டாள்.

மெள்ள மெள்ள இரண்டு வருஷங்கள் கழிந்தன. ராஜாவுக்கும் ராணிக்கும் அவமானம் தாங்க முடியவில்லை. "எப்படியும் இந்த வருஷம் நம் மகளுக்குத் திருமணம் செய்யாவிட்டால் நம் அரச வம்சத்துக்கே அழியாத அவமானம் வந்து விடும்!" என்று ராணி சொன்னாள். ராஜாவும் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு ரொம்பவும் கவலையுடன் யோசித்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு, ஏதோ யோசனை தோன்றியவன்போல் நேராக மகளிடம் சென்றான்.

"லக்ஷ்மி, இந்த வருஷம் உனக்குக் கட்டாயம் கல்யாணம் நடத்த வேண்டும். இல்லாவிட்டால் மற்ற அரசர்கள் என்னை ஏளனம் செய்வார்கள். ஆகையால் நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். நாளைக் காலையில் உனக்கு வரப்போகும் மாப்பிள்ளைக்கு ஒரு பரீட்சை வை. அதில் யார் வெற்றி அடைகிறானோ, அவனையே நீ மணந்து கொள்!" என்று சொல்லி விட்டுப் போனான்.

ராஜகுமாரிக்கு ராத்திரி முழுதும் தூக்கமே வரவில்லை. யோசனையும் ஒன்றும் தோன்றவில்லை. அவளுடைய மனசு ரொம்ப வேதனைப் பட்டது. கடைசியாக ஒரு யோசனை தோன்றியது; பொழுதும் விடிந்தது.

இந்தச் சமயத்தில் ராஜா அங்கே வந்தான். "என்ன பரீட்சை வைத்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"அப்பா, தரையில் ஒரு பெரிய கம்பளியை விரிக்க வேண்டும்; அதன் நடுவில் ஒரு எலுமிச்சம் பழத்தை வைக்க வேண்டும். அந்தப் பழத்தை யார் கம்பளியின்

மேல் கால் படாமல் எடுத்துக் கொண்டு வருவாரோ, அந்த அரச குமாரருக்குத் தான் நான் மாலையிடுவேன்!" என்றாள்.

ராஜாவும் ரொம்ப சந்தோஷத்துடன் எல்லா அரச குமாரர்களுக்கும் சுயம்வர ஓலையை அனுப்பினான்.



குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் ஒரு பெரிய கம்பளியை விரித்து அதன் மத்தியில் ஒரு எலுமிச்சம் பழம் வைக்கப்பட்டிருந்தது. ராஜாவும் ராணியும் ராஜ குமாரியும் அங்கே வந்தார்கள். பிரதம மந்திரி வந்திருந்த அரச புத்திரர்களைப் பார்த்து, "ராஜ குமாரர்களே! அதோ இருக்கும் பழத்தை இந்தக் கம்பளியின் மேல் கால் படாமல் எடுப்பவருக்கு இளவரசியைத் திருமணம் செய்து கொடுப்போம்!" என்றார்.

உடனே ஓர் அரசகுமாரன் இரண்டு கைகளையும் தரையில் ஊன்றிக் காலை மேலே தூக்கிக் கொண்டு, கையாலேயே நடந்து போய்ப் பழத்தை ஒரு கையால் எடுத்தான். பாவம், ஒரு கையால் தலை கீழாக நிற்க முடியாமல் 'தொப்' பென்று கீழே விழுந்து விட்டான்!

இன்னொருவன் குப்புறப் படுத்துக் கொண்டு, காலை மேலே தூக்கிக் கொண்டு நகர்ந்து நகர்ந்து போனான். பழத்தை எடுத்துக் கொண்டு வரும் போது எப்படியோ கால் தவறுதலாகக் கம்பளியில் பட்டு விட்டது!

இப்படியே ஒருவராலும் கம்பளியில் கால் படாமல் பழத்தை எடுக்க முடியவில்லை. பலர் முயன்று பலன் இல்லாமற் போய் விட்டது.

கடைசியாக, ஒரு வாலிப அரச குமாரன் வந்தான். கம்பளியைச் சுருட்டிக் கொண்டே போய்ப் பழத்தை எடுத்துக் கொண்டு எப்போதும்போல் மறுபடியும் விரித்துக் கொண்டே வந்து விட்டான்!

மற்ற ராஜ குமாரர்கள் அந்த அரசகுமாரனைப் பார்த்துப் பொறாமை அடைந்தார்கள்.

ராஜகுமாரி லக்ஷ்மி, சந்தோஷமாக அந்த வாலிபனுக்கு மாலையிட்டாள். ராணியும் ராஜாவும் தங்கள் புத்திசாலிப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.



★

வித்தியாசம் இல்லை!

"இது என்ன? சாம்பார் கொண்டு வாறதுக்குள்ளே சாதத்தைச் சாப்பிட்டு இலையைக் காலி பண்ணி விட்டீர்களே?"

"துளியுண்டு வைத்திருந்தியே, சாதமா அது? உப்புமாவாக்கும்னு முழுங்கிப் பிட்டேன், ஐயா!"

★



காலக்ஷேபம்



ஜாதக விசேஷம்!

நண்பர்:—என்ன ஜோசியரவர்களே! ஒரு காரணமும் இல்லாமல் பையனைப் போட்டு என்னத்துக்காக அடிக்கிறீர்கள்?

ஜோஸ்யர்:—காரணமா? அவன் ஜாதகத்திலே என் கையாலே அடி படணும்னு எழுதியிருக்குது ஸார், எழுதியிருக்கு!

★

பார்த்த இடம்!

"என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்கிறீர்களே, என்னை இதற்கு முன் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களோ?"

"ஆகா! பேஷாய்ப் பார்த்திருக்கிறேன். போன டிஸம்பரிலே மிருகக் காட்சி சாலையிலே பார்த்தேன்!"

★

மேல் படிப்பு

ஸ்கூல் பைனல் பையன்:—அப்பா, நான் பரீக்ஷை பாஸ் பண்ணின பிறகு மேலே என்ன படிக்கலாம்?

அப்பா:—பத்திரிகைகளில் "தேவை" என்ற தலைப்பின் கீழ் வருவதைக் கவனமாய்ப் படிக்கலாம்!

★

தெரிந்த கோளாறு

டாக்டர்:—ஸார், உம்முடைய நாக்கைக் கொஞ்சம் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளும்!

நோயாளி:—தெரியும், டாக்டர்! ஏற்கெனவே நான் இரண்டு அவதூறு வழக்குகளில் மாட்டிக் கொண்டிருக்கிறேன்!

சரிதான்!

மானேஜர்:—அடே, பையா! ஏன் நாற்காலியெல்லாம் ஒரே தூசியாய்க் கிடக்கு? நீ துடைக்கவே இல்லையா?

பையன்:—நான் என்ன செய்யட்டுங்க? இன்னும் அதுலே யாருமே உட்காரல்லியே!

★

காண்பிக்க வேண்டியது!

தகப்பனார்:—என்னடா அது. நேற்று ராத்திரி மாடியிலே உன் சிநேகிதர்களோடு அத்தனை நாழி என்ன பேச்சு?

பையன் (சீட்டாடிக் கொண்டிருந்தவன்):—அவர்களுக்கு என் போட்டோக்களைக் காண்பித்துக் கொண்டிருந்தேன், அப்பா!

தகப்பனார்:—அடுத்த தடவை வரபோது அவர்களுக்கு எலெக்ட்ரிக் கம்பெனியிலேயிருந்து எனக்கு வந்திருக்கிற 'பில்'லைக் காண்பி!

★

கோபத்தின் காரணம்!

அப்பா:—குழந்தை என் ஜாடையாகவே இருக்கிறதாம்......அவர் அடிக்கடி சொல்கிறார்.

சிநேகிதி:—நானும் அப்படித்தான் நினைத்தேன்; சொன்னால் நீ கோபித்துக் கொள்வாயோ என்று பேசாமல் இருந்தேன்!


★

எப்போதுமா?

"நான் எப்போது அசட்டுத்தனமாக நடந்து கொண்டாலும் எப்படியோ சிரித்துச் சமாளித்து விடுவேன்."

"தெரியும்......எங்க மாமா நீங்கள் எப்போதும் சிரிச்ச முகமா யிருப்பீர்கள் என்று சொல்லி யிருக்கிறார்!"


"உங்கள் சருமத்தை
லக்ஸ் டாய்லட் சோப்
குளுமையாகவும், அழகுடையதாகவும்
வைத்துக்கொள்ளுகிறது" என்று
சொல்லுகிறார்
ஹஸன்பானோ
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும்
அழகையளிக்கும் சோப் !
LTS. 141-111-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED



கண்ணாடித் தொழிலாளி

கண்ணாடி உருக்குவது இந்தியாவின் புராதனமான தொழில். அதில் ஈடுபட்டுள்ள திறமையும் அனுபவமும் நிறைந்த இன்றையத் தொழிலாளி, பக்குவமாகக் காய்ச்சிய கண்ணாடிக் குழம்பை, தொழில் முறைப்படி ஊதி, கண்ணாடிக் கிண்ணம், பிளாஸ்க் முதலிய பொருள்களை உற்பத்தி செய்கிறார். உருவமே இல்லாத ஒன்றிலிருந்து உருவங்களை அமைக்கிறார்.

இக்காலத்து முன்னேற்றமான முறைகளைக் கொண்டு, நம் நாட்டின் உபயோகத்துக்குத் தேவையான கண்ணாடிப் பொருள் எல்லாவற்றையுமே தயாரிக்க முடியும். ஆனால் அவைகளை நாடெங்கும் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய நல்ல ரோடுகள் தேவை.

இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு நல்ல ரோடுகள் தேவை என்னும் நம்பிக்கையுடன்
பர்மா ஷெல் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.



BURMAH-SHELL OIL STORAGE AND DISTRIBUTING CO. OF INDIA LTD. (INCORPORATED IN ENGLAND) GA/BC/1



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI டிஸம்பர் 22, 1946 4 அண

REGD. No. M. 4392



மதராஸ் ஸிடி ஏஜண்ட்ஸ்: சக்தி டிரேடிங் கம்பெனி
581, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்